Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, OCTOBER 28, 2022

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 28, 2022 | ஒளி: 08 கதிர்: 131 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## 14இல் பட்ஜெட்

### டிசெம்பர் 08 வாக்கெடுப்பு

2023ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை இரண்டாவது மதிப்பீட்டுக்காக நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (27) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஜனாதிபதியும், நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க நவம்பர் 14ஆம் திகதி பி.ப 1.30 மணிக்கு ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை இரண்டாவது மதிப்பீட்டுக்காக சமர்ப்பித்து உரையாற்றுவார்.

தொடர்ச்சி P2

அரசாங்கத்தின் வாக்குறுதிகளை

# நம்பாதீர்கள்

### ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவிடம் கூட்டமைப்பு தெரிவிப்பு

நல்லிணக்கத்தை பலப்படுத்தும், மற்றும் தமிழ் மக்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதில் இதுவரை காலமாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. எனவே அரசாங்கத்தின் வாக்குறுதிகளை நம்பாது, அதனை செயற்படுத்தும் விதமாக அழுத்தம் கொடுக்க வேண்டும் என ஐரோப்பிய வெளிவிவகாரச் சேவையின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பாவோலா பாம்பலோனி தலைமையிலான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவிடம் தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சந்தித்து முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2



உள்நாட்டு இறைவரி திருத்த

## சட்டமூலத்துக்கு எதிராக மனு

அரசாங்கத்தால், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உள்நாட்டு இறைவரி திருத்தச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது என்று அறிவிக்குமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டமா அதிபரை பிரதிவாதியாக குறிப்பிட்டு, ஆடைத்தொழிற்சாலை ஒன்றின் பொது முகாமையாளரால் குறித்த மனு தாக்கல் செய்யயப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் முன்பாக

## கவனயீர்ப்பு போராட்டம்

காணாமல்போனோரை நினைவுகூருவதற்கான தேசிய தினத்தின் 32 ஆவது நிறைவை முன்னிட்டு நேற்று (27), காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தினால் கொழும்பிலுள்ள காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவற்றின் முன்பாகக் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ச்சி P2




## பாணுக்குள் இருந்து குண்டூசிகள் மீட்பு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், அச்சுவேலி பகுதியில் வாங்கிய பாணுக்குள் இருந்து மூன்று குண்டு ஊசிகள் மீட்கப்பட்டுள்ளன. அச்சுவேலி பகுதியில் உள்ள கடை ஒன்றில் நேற்றைய தினம் வியாழக்கிழமை, குடும்பஸ்தர் ஒருவர் றோஸ் பாண் வாங்கியுள்ளார். அந்த பாணை வீட்டிற்கு கொண்டு சென்று தமது சிறு பிள்ளைகளுக்கு வழங்கிய போதே ,

தொடர்ச்சி P2






பாதுகாப்பு அமைச்சின் கீழிருந்த

## நிறுவனங்கள் கைமாறின

கடந்த காலங்களில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்த இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு இப்போது தொழில்நுட்ப அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.


நேற்று, (ஒக்டோபர் 27, 2022) வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானிக்கு அமைய, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால், தொழில்நுட்ப அமைச்சர் என்ற வகையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## மின் கட்டணத்துடன் 2.5% பங்களிப்பு வரி

ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் அமலாகும் வகையில் மாதாந்த மின் கட்டணத்துடன் 2.5 சதவீத சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி சேர்க்கப்படும் என்று இலங்கை மின்சார சபை, நேற்று (27) தெரிவித்தது.

சமூக பாதுகாப்பு வரிச் சட்டத்துக்கு அமைய, இலங்கை மின்சார சபையின் மின்சார விநியோகமானது, 2.5% சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிக்கு உட்பட்டது என்று நிதியமைச்சு அறிவித்தமைக்கு அமைய இம்மாதம் 1ஆம் திகதி முதல்



அமலாகும் வகையில், சபை மேற்படி வரியை அறவிடவுள்ளது.

தொடர்ச்சி P2

டயானாவுக்கு எதிரான வழக்கு

## விசாரணை அறிக்கையை நவ.10இல் சமர்ப்பிக்கவும்

### சீ.ஐ.டிக்கு நீதிமன்றம் உத்தரவு

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, எதிரான விசாரணைகள் தொடர்பான அறிக்கையை நவம்பர் 10ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், நேற்று (27) உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2

எரிவாயு விலை குறைப்பு விவகாரம்

## வாங்கத் தயங்குவோர் வதந்தி பரப்புகின்றனர்

### எரிவாயுவுக்கு தட்டுப்பாடு இல்லை என்கிறது லிட்ரோ

எரிவாயு விலை குறைக்கப்படும் என்ற அறிப்பைத் தொடர்ந்து, சில விநியோகஸ்தர்களும் சரக்கு சேகரிப்பாளர்களும் எரிவாயுவை கொள்வனவு செய்யத் தயங்குவதாகத் தெரிவித்த லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ்,

தொடர்ச்சி P2

திலினிக்கு எதிராக

## 128 கோடி ரூபாய் மோசடியென 12 முறைப்பாடுகள்

பாரிய பண மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலி, 128 கோடி ரூபாய் மோசடி செய்துள்ளதாக 12 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ, நேற்று (27) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தேர்தலை சந்திக்கத் தயார்



நாட்டுக்காக முன்னெடுக்கும் தீர்மானங்களின் போது, சில விடயங்களை எம்மால் தவிர்க்க முடியாது. ஜனநாயகத்தை மதித்து எடுக்கும் சில வேலைத்திட்டங்களில் தவறுகளும் இடம்பெற்றுள்ளன.

தொடர்ச்சி P2

## அடுத்தவாரம் முதல் பாண் விலை குறையும்?



போதிய அளவில், இறக்குமதி செய்யப்படும் கோதுமை மா கிடைக்குமாயின், பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை குறைக்கப்படும் என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கடிதங்கள் தீக்கிரை

க. அகரன்

காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தால் அனுப்பப்பட்ட கடிதங்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் தீக்கிரையாக்கப்பட்டன.

தொடர்ச்சி P2



## நலிவுற்றோர் விவகாரம் நவம்பர் 8இல் வருகிறது

### மனோ – அநுர கூட்டு பிரேரணை

நாட்டில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியால், வாழ்வாதார துன்பங்களை மிக அதிகமாக எதிர்கொள்ளும் மிகவும் நலிந்த பிரிவினர் தொடர்பில், முழுநாள் விவாதம் ஒன்றை நடத்த தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பியும், தேசிய மக்கள் சக்தி (ஜேவிபி) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்பியும் முன்வைத்த கோரிக்கையை நேற்று, சபாநாயகர் தலைமையில் கூடிய கட்சி தலைவர்கள் குழு ஏற்றுக்கொண்டது.

தொடர்ச்சி P2



## நிதி நெருக்கடியைத் தாங்கும் வேலைத்திட்டங்கள் என்ன?

### அமெரிக்க திறைசேரியின் உதவி செயலாளர், மத்தியவங்கி ஆளுநர் கலந்துரையாடல்

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவி செயலாளர் றொபர்ட் கப்ரோத், திறைசேரி செயலாளர் கே.எம்.எம் சிறிவர்த்தன மற்றும் மத்திய வங்கி ஆளுநர் பி. நந்தலால் வீரசிங்க ஆகியோரைச் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கும் கலந்துகொண்டிருந்தார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# நம்பாதீர்கள்

இந்தச் சந்திப்பு கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பியின் கொழும்பு இல்லத்தில் நேற்று (27) நடைபெற்றது. இதன்போது கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தனுடன் கட்சியின் ஊடகப்பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் எம்.பியும் கலந்துகொண்டார். மேற்படி சந்திப்பில் பல முக்கிய விடயங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர் விரிவாகக் கலந்துரையாடினர் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

மனித உரிமைகள் விவகாரம், பொருளாதார மீள்கட்டமைப்பு, ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பவற்றை நடத்த வேண்டியதன் தேவைப்பாடு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் இதன்போது கூட்டமைப்பினர் எடுத்துரைத்துள்ளனர். மேலும் அரசாங்கம் கொடுக்கும் வாக்குறுதிகளில் உண்மைத்தன்மை இல்லை எனவும், அரசாங்கத்தின் வாக்குறுதிகளை நம்ப வேண்டாம் எனவும் வலியுறுத்தியுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், குறித்த வாக்குறுதிகளை செயற்படுத்தும் விதமாக ஐரோப்பிய ஒன்றியம் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, பயங்கரவாதத் தடைச் சட்டம், நல்லிணக்கம், அதிகாரப்பகிர்வு, அரசமைப்பு சீர்திருத்தம் மற்றும் வடக்கு, கிழக்கு காணி விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடன் பேசினோம் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.

# மின் கட்டணத்துடன் 2.5% பங்களிப்பு வரி



மின்சார பாவனைக்கு இந்த வரியில் இருந்து விலக்கு அளிக்குமாறு நிதியமைச்சுக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பரிந்துரைத்ததாக ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

எனினும், குறித்த சட்டத்தின் பிரகாரம் இலங்கை மின்சார சபையின் மின்சார விநியோகம் இந்த வரிக்கு உட்பட்டது என்று நிதியமைச்சால் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 1ஆம் திகதி முதல் அமல்படுதப்பட்ட சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி காரணமாக, பல்வேறு கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதுடன், பொருட்களின் விலைகளும் உயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

## வருந்துகின்றோம்

ஒக்டோபர் 26ஆம் திகதிய எமது மின்னிதழில் 'நாட்டின் சுகாதார சேவை வீழ்ச்சியடையும் அபாயம்' எனும் பிரதான தலைப்புச் செய்தியில் உள்ளடக்கப்பட்ட படம் தவறானது. இதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம். (ஆ+ர்)

# 14இல் பட்ஜெட்

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டு மீதான விவாதம் நவம்பர் 15ஆம் திகதி ஆரம்பிக்கவிருப்பதுடன், இதன் மீதான வாக்கெடுப்பை நவம்பர் 22ஆம் திகதி பி.ப 5.00 மணிக்கு நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை மீதான விவாதம் நவம்பர் 23ஆம் திகதி ஆரம்பிக்கவிருப்பதுடன், டிசெம்பர் 08ஆம் திகதி பி.ப 5 மணிக்கு மூன்றாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பை நடத்த இணங்கப்பட்டது. இதற்கமைய நவம்பர் 14ஆம் திகதி முதல் டிசெம்பர் 08ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஞாயிறு மற்றும் போயா தினங்கள் தவிர கிழமையின் ஏனைய நாள்களில் பாராளுமன்ற அமர்வு இடம்பெறும்.

வரவுசெலவுத்திட்ட விவாதம் நடைபெறும் காலப் பகுதியில் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரத்தை ஒதுக்காதிருக்கத் தீர்மானிக்கப்பட்டதுடன், டிசெம்பர் 09ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரையான காலப் பகுதி 50 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

# கவனயீர்ப்பு போராட்டம்

அதற்கமைய கொழும்பில் அமைந்துள்ள காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் என்பவற்றின் முன்பாக நேற்று காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்படல் விடயங்களில் தமது உறவுகளை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த பலர் கலந்துகொண்டிருந்தனர்.

காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தின் பிரதிநிதிகள் காணாமல்போன தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறியுமாறும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்குரிய இழப்பீட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தி அலுவலகத்தின் அதிகாரிகளிடம் மகஜர்களைக் கையளித்தனர். பின்னர் சீதுவ, ரத்தொலுகமவில் அமைந்துள்ள காணாமல்போனோரின் நினைவுத்தூபிக்கு அருகாமையில் காணாமல்போனோரை நினைவுகூருவதற்கான நிகழ்வொன்றும் காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல் ஆக்கப்பட்டோரின்...

தமது உறவுகளுக்கு நீதி கோரி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியா, ஏ9 வீதியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக நேற்றும் (27) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான மேலதிக விவரங்கள் கோரி, அரசாங்கத்தின் காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தால் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறகளுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த அலுவலகத்தை தாம் நிராகரிப்பதாகவும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச தலையீட்டின் மூலமே காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கிடைக்கும் எனத் தெரிவித்து குறித்த கடிதத்தை கிழித்து அதனை தீக்கிரையாக்கினர். கடிதங்களை தீக்கிரையாக்கிய தாய்மார் 'இன்னும் காலம் தாழ்த்தாது கையில் ஒப்படைத்த தமது பிள்ளைகளே தமக்கு வேண்டும்' எனக் கோரி கண்ணீர் விட்டழுதனர்.

# அடுத்தவாரம் முதல் பாண் விலை...

ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டுள்ள போதும், அதை கொள்வனவு செய்வதற்கு பேக்கரிகளுக்கு 300 ரூபாய் வரை செலவாவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், இறக்குமதி செய்யப்படும் கோதுமை மா போதிய அளவு கிடைக்கப்பெறும் பட்சத்தில் அடுத்த வாரம் முதல் பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என்றார்.

பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை குறைப்பது தொடர்பில் இப்போதே அறிவிக்க முடியாது என்று தெரிவித்த அவர், எதிர்காலத்தில் அது குறித்து அறிவிக்கப்படும் என மேலும் தெரிவித்தார்.

# பாணுக்குள் இருந்து குண்டூசிகள் மீட்பு

பாண் ஒன்றினுள் மூன்று குண்டு ஊசிகள் காணப்பட்டுள்ளன. அது தொடர்பில் அப்பகுதி பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சுகாதார பரிசோதகர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்.

# நிறுவனங்கள் கைமாறின

கடந்த காலங்களில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு பாதுகாப்பு அமைச்சரின் கீழ் இருந்த நிலையில், தேசிய பாதுகாப்பு என்பதை கருத்தில்கொண்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவினால் ஒரு சில தீர்மானங்கள் எடுக்கப்பட்ட வேளையில் இது குறித்து பாரிய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும், பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்த தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நிதி அமைச்சின் மேற்பார்வையில் இருந்த நிறுவனங்களின் பதிவாளர் துறை, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை ஆகியவை சம்பந்தப்பட்ட அமைச்சுக்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, முன்னர் விவசாய அமைச்சின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட லங்கா பொஸ்பேட் லிமிடெட் மற்றும் கைத்தொழில் அமைச்சின் கீழ் இருந்த ரோபோட்டிக் பயன்பாடுகளுக்கான மையம் என்பனவும் மாற்றப்பட்டுள்ளன.

# சட்டமூலத்துக்கு எதிராக மனு

உத்தேச சட்டமூலத்தின் மூலம் ஒருவரின் மாதாந்த வரிக்கு உட்பட்ட வருமான வரம்பு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த சட்டமூலத்தை இம்மாதம் 21ஆம் திகதி பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்கள் மீது செலுத்த முடியாத வரிச்சுமை சுமத்தப்பட்டு, பொதுமக்கள் கடும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாக நேரிடும் எனவும் இதன் மூலம் ஏற்றுமதி, உள்ளூர் கைத்தொழில், அபிவிருத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தேச சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிகள், அரசியலமைப்பின் கீழ் மக்களின் நலனை உறுதிப்படுத்துவதற்கும் சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கத்தின் கடப்பாட்டை கடுமையாக மீறுவதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டமூலத்தின் 15, 16, 22, 29, 36 மற்றும் 39 ஆகிய பிரிவுகளின் உள்ளடக்கங்கள் அரசியலமைப்புக்கு முரணானவை என்றும் அரசியலமைப்பின் கீழ் மக்களின் நலன் மற்றும் சமூக பாதுகாப்பை உறுதி செய்தல் போன்ற விடயங்கள் கடுமையாக மீறப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டுமாயின், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அனுமதி கிடைக்க வேண்டும் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 128 கோடி ரூபாய் மோசடியென...

பல அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் உள்ளிட்ட பிரபலங்களிடம் எரிபொருள் இறக்குமதி செய்து இலாபம் ஈட்டித் தருவதாகக் கூறி பல கோடிகளை மோசடி செய்த குற்றச்சாட்டில், கடந்த 6ஆம் திகதி கைது செய்யப்பட்ட திலினி, நவம்பர் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பிரதான சந்தேகநபரான திலினியும் அவருடைய காதலன் என்று கூறப்படும் இசுரு பண்டாரவும் தன்னிடம் 60,000 அவுஸ்திரேலிய டொலர், 100,000 அமெரிக்க டொலர் மற்றும் ஒரு கிலோ கிராமுக்கும் அதிகமான தங்கத்தை மோசடி செய்துள்ளதாக கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர், சீ.ஐ.டியில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இசுருவும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும், திலினி பிரியமாலிக்கு எட்டரைக் கோடி ரூபாய் வழங்கியுள்ளதாக முன்னாள் ஆளுநர் அஸாத் சாலி சீ.ஐ.டியில் கடந்த 17ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தார்.

நீதிமன்ற அனுமதியின் பேரில், உலக வர்த்தக மையத்தின் 34ஆம் மாடியில் அமைந்துள்ள திலினியின் அலுவலகம் உள்ளிட்ட பல இடங்களுக்கு அவரை அழைத்துச் சென்ற சீ.ஐ.டியினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

சந்தேகநபர் விளக்கமறியலில் இருந்தபோது பல அலைபேசிகளைப் பயன்படுத்தியதாகவும், அவரை பிணையில் விடுவிக்க 3 கோடி ரூபாய் கோரி, நபர் ஒருவரை தொடர்பு கொண்டமை விசாரணைகளில் இருந்து தெரியவந்தாகவும் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சீ.ஐ.டியினர் அறிவித்திருந்தனர்.

அத்துடன், மோசடியான முறையில் பெறப்பட்ட பணத்தில் வருமானம் ஈட்டாமல், சந்தேகநபர் எவ்வாறு 41 இலட்சம் ரூபாயை மாதாந்தம் செலவிட்டார் என்பது விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சீ.ஐ.டியினர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தலை சந்திக்க தயார்

ஆனால் இவை எதுவுமே எமது தோல்வி என கருதிவிட வேண்டாம். எந்த நேரத்திலும் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள தயாராகவே உள்ளோம் என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஏற்பாட்டில் 'ஒன்றாக இணைவோம்' கூட்டம் நேற்று (27) புத்தளம் மாவட்டத்தில் நடைபெற்றது. இந்த மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

எமக்கு எதிராக விமர்சனங்கள் இருந்தாலும், நாட்டுக்கு எதிராக நாம் ஒருபோதும் தவறான தீர்மானங்கள் எடுத்ததே இல்லை. எனவே எம்மை குற்றவாளிகள் எனக் கூற முடியாது. பைத்தியக்காரர்கள் குழப்பமடைவதற்காக, வைத்தியர்கள் குழம்ப முடியாது. நாட்டை நாசமாக்குவது இலகுவானது. ஆனால் நாட்டை கட்டியெழுப்புவதே கடினமானதாகும். அத்துடன் வேலைத்திட்டம் ஒன்றுடன் பயணிக்கும் போது நாட்டை மீட்டெடுக்க முடியும். இதில் மக்களை குழப்பாது பயணிக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம். கேள்விகள் எழுப்பப்படுகின்றன. சிலர் பதிலென மீண்டும் கேள்வியை முன்வைக்கின்றனர். ஆனால் இதனை நாம் சரியாக கையாண்டு வருகின்றோம். சகல கேள்விகளுக்கும் அச்சமில்லாது சவால்களை எதிர்கொள்ளும் தரப்பு நாம் மட்டுமே என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

மேலும், எந்த நேரத்திலும் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளோம். அதேபோல் ஒரு சில விடயங்களை எம்மால் தவிர்க்க முடியாது. அதேபோல் ஜனநாயகத்தை மதித்து எடுக்கும் ஒருசில நடவடிக்கைகளுக்காக சில விடயங்கள் தவறவிடப்பட்டுள்ளன. ஆனால் இவை எதுவுமே எமது தோல்வி எனக் கருதிவிட வேண்டாம். அதேபோல் இன மத பேதங்களுடன் நாம் தொடர்ந்தும் முன் சென்றால் எம்மால் மீண்டெழ முடியாது. ஆகவே ஒன்றாக எழுவோம். நாட்டுக்காக அனைவரும் ஒன்றிணைவோம் என்றார்.

# வாங்கத் தயங்குவோர் வதந்தி பரப்புகின்றனர்

புதிய எரிவாயு தொகுதிகள் துறைமுகங்களை அடையும் வரை, எதிர்வரும் மாதங்களில் எரிவாயு விநியோகம் இருக்காது எனும் வதந்திகளை பரப்ப ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

எரிவாயுத் திருத்தம் குறித்த மற்றோர் அறிவிப்பு, நாளை (29) வெளியிடப்படும் என்றும் உலக சந்தை நிலைவரம் கடந்த மாதத்தைப் போலவே உள்ளதால், அதைக் கொண்டு தற்போதைக்கு விலைகளை கணிக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்றையதினம் (27) வரை உலக சந்தையின் எரிவாயு விலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படவில்லை என்று தெரிவித்த அவர், சில சந்தர்ப்பங்களில் எரிவாயு விலைகள் குறையாமல் அல்லது கூடாமல் அப்படியே நின்று விடுவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், தேவைக்கேற்ற எரிவாயு கையிருப்பில் உள்ளதாகவும் எனினும் நட்டம் ஏற்படும் என்று அஞ்சும் விநியோகஸ்தர்கள், சிலிண்டர்களை கொள்வனவு செய்து சேமிக்கத் தயங்குகின்றனர் என்றார்.

சில விநியோகஸ்தர்களின் நடத்தை குறித்து நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டதாகவும் தேவையான பங்குகள் அனுப்பப்பட்டு பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஓமானில் இருந்து 3,700 மெற்றிக் தொன் எரிவாயுவை கொண்டுவரும் கப்பல் இன்று மாலை நாட்டை வந்தடையும் என்றும் நவம்பர் 2 மற்றும் 6ஆம் திகதிகளிலும் எரிவாயுக் கப்பல்கள் நாட்டை வந்தடையும் என்றும் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# நலிவுற்றோர் விவகாரம்...

இதன்படி வரவு -செலவு திட்டத்துக்கு முன்னர் கூடும் பாராளுமன்ற வாரத்தின் முதலாம் நாளான நவம்பர் எட்டாம் திகதி செவ்வாய்கிழமையன்று இந்தக் கருப்பொருளில் முழு நாள் விவாதம் நடத்த கட்சி தலைவர்கள் குழு ஏற்றுக்கொண்டது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பெருந்தோட்ட துறை 51 விகிதம், நகர துறை 43 விகிதம், கிராமிய துறை 34 விகிதம் என்ற ஐ.நா நிறுவனங்களின் கணக்கெடுப்பின்படி, கடந்த வாரம், இந்நாட்டின் மிக மோசமான நெருக்கடியை சந்தித்துள்ள பெருந்தோட்ட துறை மக்களின் வாழ்வாதார விவகாரங்கள் தொடர்பில், ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை, நான் கொண்டு வந்து விவாதத்துக்கு உள்ளாக்கி இருந்தேன். நாட்டில் வாழும் அனைத்து நலிந்த பிரிவினர்கள் தொடர்பில் கூட்டாக பிரேரணை கொண்டு வந்து முழுநாளும் விவாதிப்போம் என்ற யோசனையை ஜேவிபி தலைவர் நண்பர் அநுரகுமார திஸாநாயக்கவும், நானும் அதன்பின் பேசி முடி செய்தோம். அதன்படி இன்று அநுரகுமார திஸாநாயக்க அதுபற்றி கருத்திட, அதை நான் ஆதரிக்க கட்சி தலைவர்கள் தற்போது எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளனர் என தெரிவித்துள்ளார் .

# நிதி நெருக்கடியை...

நாட்டின் இப்போதுள்ள நெருக்கடி நிலைமைகள் குறித்து இந்தச் சந்திப்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்ட நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் மட்ட ஒப்பந்தங்களுக்கான இலங்கையின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் நிதி நெருக்கடிகளைத் தாங்கும் வகையில் நிலையான, நெகிழ்ச்சியான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் அரசாங்கம் முன்னெடுத்துள்ள புதிய வரிக்கொள்கைகள் குறித்தும், சர்வதேச முதலீடுகளை ஈர்க்கும் வேலைத்திட்டங்கள் குறித்தும், மத்திய வங்கியின் மூலமாக முன்னெடுக்கப்படும் கலந்துரையாடல்கள் குறித்தும் ஆளுநர் இதன்போது தெளிவுபடுத்தியுள்ளார். கடன் மறுசீரமைப்பில் இருதரப்பு மற்றும் பலதரப்பு கடன் வழங்குநர்களுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கலந்துரையாடல்களின் முன்னேற்றங்கள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

மேலும், நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முயற்சிகள் குறித்து எடுக்கப்படக்கூடிய நிலையான தீர்வுகள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதாக அமெரிக்க தூதுவர் தனது டுவிட்டர் கணக்கில் குறிப்பிட்டுள்ளார்.

# விசாரணை அறிக்கையை...

அன்றையதினத்தில் மன்றில் ஆஜராகுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரிக்கும் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்புமாறு கட்டளையிட்டது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளருக்கு பொய்யான தகவல்களை வழங்கி இலங்கை கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டார் என்று அவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை நல்வழிப்படுத்த வடக்கில்

# புனர்வாழ்வு நிலையம் அவசியம்

எம்.றொசாந்த்

வடக்கில் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்றவர்களை நல்வழிப்படுத்தவதற்கான புனர்வாழ்வு நிலையம் ஒன்று வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் ஊடக பிரிவு, ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த செய்தி குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

வடக்கில் போதைப்பொருள் பாவனை அச்சுறுத்தும் வகையில், அதிகரித்து வருவதாக அண்மைய தகவல்கள் வெளிப்படுத்தி வருகின்றமை தொடர்பாக தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும். அது தொடர்பான அவசியமான சட்ட ஏற்பாடுகள் தொடர்பாகவும் அவசரமாக சிந்திக்க வேண்டும். மேலும், வடக்கில் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்றவர்களை நல்வழிப்படு த்தவதற்கான புனர்வாழ்வு நிலையம் ஒன்று வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட வேண்டும். அத்துடன் போதைப்பொருள் பாவனை குற்றச்சாட்டின் அடிப்படையில் நீதிமன்றில் முன்னிலைப்ப டுத்தப்படுகின்ற சந்தேகநபர்களை, சிறைச் சாலைகளுக்கு அனுப்பாமல், புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை நீதவான் நீதிமன்றிற்கு வழங்க வேண்டும்.



வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காணும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுவின் முதலாவது கலந்துரையாடலிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால், குறித்த விடயத்தினை வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது என குறித்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துங்கள்

## அரசியல் கட்சிகளிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

அரசியலமைப்பு பேரவைக்கு முன்வைக்கப்படும் வேட்பு மனுக்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும், பக்கச்சார்பின்றி அந்தப் பேரவைக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசியலமைப்பு பேரவைக்காக மேற்கொள்ளப்படும் சகல நியமனங்களும், பொதுமக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அமைய வேண்டும். அத்துடன், குறித்த பேரவைக்காக நியமிக்கப்படும் பிரதிநிதிகள், மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய மற்றும் நற்பெயருடன் கூடியவராக இருத்தல் அவசியம்.

அரசியலமைப்பு பேரவை ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர், சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான தவிசாளர்கள் மற்றும் அங்கத்தவர்களைப் பெயரிடும் முறைமை வெளிப்படைதன்மையுடன் இருத்தல் அவசியம் என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பயணத்தை நிறுத்த முடியாது

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான எமது அணியின் அரசியல் பயணத்தை எவராலும் தடுக்க முடியாது. எவ்வாறான அழுத்தங்கள், நெருக்கடிகள் வந்தாலும் மக்களுடனான எமது அரசியல் பயணத்தை நிறுத்தவே முடியாது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஏற்பாட்டில் 'ஒன்றாக இணைவோம்' கூட்டம் நேற்று (27) புத்தளத்தில் நடைபெற்றது. இந்த மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே நாமல் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

மஹிந்த ராஜபக்ஷ மக்களை சந்திப்பதை எவராலும் தடுக்க முடியாது. எமது வீடுகளை எரித்து, அச்சுறுத்தி எமது அரசியல் பயணத்தை நிறுத்தலாம் என நினைத்தால் அது வெற்றிபெறாது. என்ன அழுத்தங்கள், நெருக்கடிகள் வந்தாலும் மக்களுடனான எமது அரசியல் பயணத்தை நிறுத்தவே முடியாது. நாம் மீண்டும் மக்களுடன் ஒன்றிணைத்து எழுவோம். கட்சியாக மீண்டும் பலமடைந்து, எமது அரசாங்கத்தை உருவாக்குவோம். எம்மால் ஏற்பட்ட தவறுகளை திருத்திக்கொண்டு மீண்டும் சரியான மக்கள் அரசாங்கம் ஒன்றை உருவாக்குவோம் எனக் குறிப்பிட்டார்.



மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில், எமது ஆட்சியில் பல்வேறு வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்தோம். எனினும் 2015ஆம் ஆண்டின் பின்னர் பாரிய பின்னடைவு ஏற்பட்டது. அதன் பின்னர் 2020ஆம் ஆண்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் மீண்டும் ஆட்சியை அமைத்தோம். ஆனால் அன்றில் இருந்து எமக்கு பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன. அவ்வாறான நிலையிலும் பல்வேறு வரி சலுகைகளை மக்களுக்கு கொடுத்தோம். மக்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கி, தேசிய வர்த்தகத்தை கட்டியெழுப்பும் தீர்மானங்களை எடுத்தோம். ஆனால் எம்மால் எதிர்பார்த்த அளவுக்கு அதில் வெற்றி கொள்ள முடியவில்லை. எனினும் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கி, பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கிறோம் என்றார்.

இன்று நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ள வரிகள் மக்களால் தாக்குப்பிடிக்க முடியாத அளவில் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இதில் மாற்றங்களை செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்துகிறோம். அவசியமான வரிகளை அதிகரித்து மக்களுக்கு சலுகைகளை கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மருந்து வகைகள் நன்கொடை

நேபாளத்தின் லும்பினி சர்வதேச பௌத்த அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் வணக்கத்துக்குரிய மைத்திரி தேரரால் நன்கொடையாக வழங்கப்பட்ட 100 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதியான மருந்துப் பொருட்கள், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வு நேற்று (27) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழக 306 C 2 பலாங்கொடை கிளையின் கோரிக்கையின் பிரகாரம், இந்த மருந்துப் பொருட்கள் பலாங்கொடை ஆதார வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்பட்டன. சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர, வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இரேஷா பத்திரகே, சர்வதேச லயன்ஸ் கழக 306 C 2 முன்னாள் லயன்ஸ் தலைவர் லசந்த குணவர்தன, ஏ.பி ஜகத்சந்திர, டபிள்யூ. கே.என் விஜேசூரிய, சுனில் ஒபேசேகர, சிங்ஹ சமன் குமார ஹெட்டியாரச்சி உள்ளிட்ட அங்கத்தவர்கள் இதில் கலந்துகொண்டனர்.



போதை ஏற்றும் வலிநீக்கி மாத்திரைகள் குறித்த எச்சரிக்கை:

# வவுனியாவை உலுக்கும் 'மூல்'கள்

க. அகரன்

அண்மைக்காலத்தில், இலங்கையின் வடபுலத்தில் போதைபொருட்கள் விற்பனைக்கும் நுகர்வுக்கும் எவர் துணை நின்றார்களோ, அவர்களே வெள்ளை உள்ளத்தவர்கள் போன்று இன்று சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு, போதைப்பாவனையைக் கட்டுப்படுத்தபோவதாகத் தெரிவிக்கும் நாடகங்களும் அரங்கேறுகின்றன.

ஆய்வுகளின் அடிப்படையில், யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களை குறிவைத்து, போதை வியாபாரம் நடைபெற்று வருவதாகவும் இது, எதிர்கால சந்ததியின் தனித்துவத்துக்கும் ஆளுமைக்கும் விடுக்கப்படும் சவால் எனவும் எச்சரிக்கப்படும் நிலையிலேயே, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா போன்ற பகுதிகளில் 'உயிர்கொல்லி போதை மருந்து விற்பனை' என்ற தலைப்பில் செய்தி ஒன்று வெளிவந்தது.

குறித்த மருந்து, 'உயிர்கொல்லி போதை மாத்திரையா' என ஆராய்கின்றபோது, அவ்வாறான மொழிநடை பிரயோகம், தவறானதாகும். குறித்த மருந்து, 'பிரிக்கபிலின்' என்ற வலிநிவாரண மாத்திரையாகும். இது தொடர்பில், மருத்துவர்கள் விளக்கும்போது, "வலி நிவாரணி மருந்துகள் அதிகளவில் பயன்படுத்தப்படும் போது அல்லது, தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படும் போது, அது போதையை தரக்கூடியதாக இருக்கும்" என்கின்றனர்.

எனவே, வலிநீக்கி மாத்திரைகளை நோயாளர்களுக்கு வழங்கப்படும் போது, மருத்துவர்கள் மிகஅவதானமாக செயற்பட வேண்டும் என எச்சரிக்கின்றனர். இவ்வாறான சூழலில், ஔடதங்கள் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல்களைப் பரிசீலிக்கும்போது, மருந்துகள் நான்கு வகையாக வகைப்படுத்தப்படுகின்றன.

வகுப்பு 1: சாதாரண மருந்துகள்: இவற்றை (பரசிட்டமோல்) எவரும் மருந்துக்கடைகளில் பெறக்கூடியதாக இருக்கும். இதற்கு மருத்துவரது பரிந்துரை தேவைப்படுவதில்லை.

வகுப்பு 2ஏ: மருந்தகங்களில் விற்கப்படும்; இதற்கு மருத்துவரின் பரிந்துரை கட்டாயம் இல்லை. (விட்டமின் மருந்துகள், பூச்சிக் குளிசைகள், அல்சர் மருந்துகள், கிறீம் வகைகள்) .

வகுப்பு 2பி: மருத்துவரின் பரிந்துரையின்படி மாத்திரமே வழங்கப்பட வேண்டும்: குறித்த மருந்துகளை, நோயாளருக்கு வழங்கவதற்கு மருத்துவருக்கு கட்டுப்பாடுகள் இல்லை. எனினும், சரியான முறையில் நோயாளருக்கு வழங்கப்பட்டதா என்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு உள்ளபோதிலும், அதற்கான பதிவுகள் எதுவும் செய்யப்படுவதில்லை.

வகுப்பு 3: அபாயகரமான மருந்துகள்: அபாயகர ஔடதங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருந்துகளாக இவை காணப்படும். இவற்றை நோயாளிக்கு வழங்கும் போது, அதற்கான பதிவுகள், எத்தனை மாத்திரை வழங்கப்பட்டன, அவை பயன்படுத்தப்பட்டுள்ளதா, மிகுதி உள்ளதா என்பது தொடர்பான பதிவுகள், நேரடி கண்காணிப்பில் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இந்நிலையில், தற்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்படும் 'பிரிக்கபிலின்' வலிநீக்கி மருந்தானது, 'வகுப்பு 2 பி' பிரிவுக்குள் அடங்குகின்றது.



குறித்த மருந்தில் போதைதன்மை அதிகமாக உள்ளது; அல்லது, இதைப் பயன்படுத்தும் போது, போதை ஏற்றும் என்கின்றபோது, இந்த மருந்து தொடர்பில் அனைத்துத் தரப்பினருமே அவதானமாக இருந்திருக்க வேண்டும்.

அதற்குமப்பால், மன்னார் மாவட்ட முகவர்களிடம் இருந்தே குறித்த மருந்து அதிகளவில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டில், வவுனியாவிலுள்ள இரண்டு மருத்துவர்களின் பெயர்களில் 1,000க்கும் மேற்பட்ட பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. அதுவும், வவுனியாவில் மூடப்பட்டு, நீண்ட காலமாகிய மருந்தகத்துக்கும் ஆயுர்வேத மருந்துகளை மாத்திரமே வழங்கக் கூடிய ஆயுர்வேத வைத்தியர் ஒருவருக்கும் வழங்கப்பட்டுள்ளமையும் விசாரணையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த மருந்தை விற்பனை செய்யும் முகவர், இது தொடர்பில் அசண்டையீனமாக இருந்தது தொடர்பில், கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

வலி நீக்கி மருந்து, 'உயிர்கொல்லி போதை மருந்து' ஆக இருக்குமேயானால், இதை இறக்குமதி செய்தவர்கள், விற்பனை முகவர்கள் ஆகியோரும் இந்த மருந்து அதிகளவில் விற்பனை செய்யப்படும் போது, பொலிஸாருக்கோ அல்லது சுகாதாரத் துறையினருக்கோ தெரியப்படுத்தி இருக்க வேண்டிய சமூகக் கடமைப்பாடு ஒன்றும் உள்ளது.

மருந்து மற்றும் உணவு பரிசோதகர்களின் திடீர் பரிசோனையின்போது கண்டு பிடிக்கப்படும் வரை, அசண்டையீனமாக இருந்தமை தொடர்பில், சுகாதாரத் திணைக்களம் கவனம் செலுத்துமா என்பதையும்ம பொறுத்திருந்து அவதானிக்க வேண்டியுள்ளது.

இதற்குமப்பால், வவுனியா மாவட்டத்தில் ஆயுர்வேத வைத்தியர், மூடப்பட்ட மருந்தகம், வட மாகாணத்தில் பணியாற்றாத வைத்தியர், கடந்த இரண்டு வருடகாலமாக மாகாணத்தில் இல்லாத வைத்தியர் உள்ளிட்ட 24 மருந்தகங்கள் மற்றும் மருத்துவர்களின் பெயர்களுக்கு குறித்த மருந்து விநியோகிகப்பட்டுள்ள நிலையில், இவை தொடர்பில் அவதானிப்பு செலுத்த வேண்டிய தேவை, சுகாதார திணைக்களத்துக்கு உள்ளதையும் மறுப்பதற்கில்லை. இந்நிலையில், வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், "போதை மருந்து விற்பனை தொடர்பான மருத்துவரிடம் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ள நிலையில், குறித்த பணிப்பாளர் தனக்கு கீழ் பணியாற்றும் உணவு மற்றும் மருந்து பரிசோதகர், இது தொடர்பில் கவனம் எடுக்கவில்லையா என்பது தொடர்பாகவும் அவதானம் செலுத்த வேண்டும்.

வவுனியாவைப் பொறுத்தவரையில், இரண்டாம் குறுக்கு தெருவில் உள்ள வைத்தியர் ஒருவரில் பெயரில் இவ்வருடம் பெப்ரவரி மாதம் குறித்த மருந்து 280 பெட்டிகளும் மே மாதம் 400 பெட்டிகளும் ஜூலை மாதம் 400 பெட்டிகளுமாக மொத்தம் 1,080 பெட்டிகளும், வைத்தியசாலை சுற்றுவட்டத்தில் உள்ள மருத்துவர் ஒருவரின் பெயரில் இரண்டாம் மாதம் 200 பெட்டிகளும் ஏப்ரல் மாதம் 100 பெட்டிகளும் ஜூலை மாதம் 360 பெட்டிகளும் ஒகஸ்ட் மாதம் 360 பெட்டிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

உண்மையில் குறித்த மருந்துவர்கள், தமது வைத்தியசாலையின் தேவைகளுக்காக இவற்றைப் பெற்றார்களாக அல்லது அதிகளவான மருந்துகளைப் பெறும்போது இலவசமாக மருந்துகள் கிடைக்கும் என்பதால், பல மருந்தகங்கள் இணைந்து ஒரு மருத்துவரின் பெயரில் பெற்று பகிர்ந்து எடுத்தார்களா?

இல்லையேல், விற்பனை பிரதிநிதிகள் தமது மாதாந்த விற்பனையை அதிகரித்துக் காட்டுவதற்காக, மருந்துவர்களின் பெயர்களில் பற்றுச்சீட்டை இட்டு அப்பொருட்களை அங்கு கொண்டு, சென்று வேறு இடங்களுக்கு மாற்றினார்களா என்ற கோணங்களில் விசாரணைகள் செய்யப்பட வேண்டிய தேவை சுகாதார திணைக்களத்தின் பக்கமே உள்ளதைப் பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இதற்குமப்பால், விற்பனை முகவர்களும் குறித்த மருந்துகள் விற்பனை செய்யப்படும் போது, குறித்த வைத்தியர்தான் குறித்த மருந்தைக் கோரினாரா இல்லையா என்பதையும் பொருட்களை விநியோகிக்கும் போது ஆராய்ந்திருக்க வேண்டிய தேவையும் உள்ளது.

எது எவ்வாறு இருப்பினும், 'பிரிக்கபிலின்' மருந்தானது தொடர்ச்சியாக பயன்படுத்தும் ஒருவர், அதற்கு அடிமையாக்கி, அதைப் போதை தரும் மாத்திரையாக பயன்படுத்துவார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

இந்நிலையில், மருந்துவர்களைக் குறித்து வைத்து, அவர்களுக்கு கலங்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடாக இதைக் கொள்ளாமல், வடமாகாணம் மட்டுமன்றி இலங்கை முழுவதும், இளம் சமூகத்தைப் பல்வேறு வடிவில் சூழும் போதை என்ற அரக்கனிடம் இருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, அனைவரது கைகளிலும் உள்ளது. அதற்காக இனம், மதம் பேதங்கள் கடந்து ஒன்றிணைய வேண்டிய தேவையை மேற்குறித்த சம்பவங்கள் சுட்டி நிற்கின்றன.


**கம்பனியின் பெயர் மாற்றம் குறித்த பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி 2022 செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கம்பனியின் பழைய பெயர்:** பெற்றோலியம் களம்பு சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் புதிய பெயர்:** சவுத் ஏசியா பெற்றோலியம் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் இலக்கம்:** பீ - வி 125732

**பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:** இல. 63/1, வோர்ட் பிளேஸ், கொழும்பு 07.

**கம்பனி செயலாளர்கள்**
**கோபரேட் எட்வைசரி சேர்விசஸ் (பீவீடீ) எல்டீடி**

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டம் இலக்கம் 7 இன் பிரிவு 11(5) மற்றும் பிரிவு 11(2) இன் படியும் கெல்சி ஹோம்ஸ் (சென்ட்ரல் பார்க்) லிமிடெட் (PB 00235909 பதிவுசெய்யப்பட்ட முகவரி இல.02, டீல் பிளேஸ், கொழும்பு 03) இன் பெயரை கெல்சி ஹோம்ஸ் சென்ட்ரல் பார்க் பிவிடி எல்டீடி என பெயர் மாற்றப்பட்டுள்ளது என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

**செயலாளர்கள்**
**ஜனசக்தி கோபரேட் சேர்விசஸ் லிமிடெட்**

**கம்பனியின் பெயர் மாற்றம் குறித்த பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி 2022 செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கம்பனியின் பழைய பெயர்:** பிரைம் ரோட் ஒல்டர்னேட்டிவ் கம்பனி லங்கா (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் புதிய பெயர்:** பிரைம் ரோட் ஒல்டர்னேட்டிவ் கம்பனி (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் இலக்கம்:** பீ - வி 00262230

**பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:** இல. 160/7, பூர்வாராம வீதி, கொழும்பு 05.

**கம்பனி செயலாளர்கள்**
**கோபரேட் எட்வைசரி சேர்விசஸ் (பீவீடீ) எல்டீடி**



# அரசியல் தீர்வை வலியுறுத்தி இரால்குழியில் போராட்டம்

தீஷான் அஹமட்

வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வைப் பெற்றுத்தருமாறு வலியுறுத்தி '100 நாள் செயல்முனைவு' எனும் தொனிப்பொருளின் கீழ், வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் கவனயீர்ப்பு போராட்டத்தின் 88ஆவது நாளான நேற்று (27) மூதூர், இரால்குழி பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் பெண்கள் அமைப்பினர், சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டோர் வடக்கு, கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வு வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோர் விடுதலை செய்யப்பட வேண்டும், எமது நிலம் எமக்கு வேண்டும், ஒன்றுகூடுவது எமது உரிமை உள்ளிட்ட கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது, காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது எனவும் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் பசளை தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு உள்ளிட்டவைகளால் பொதுமக்களாகிய நாம் அவதியுறுகின்றோம்; இதுவரை எந்தவித தீர்வுகளும் எட்டப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

## வாழ்வாதாரம் இழந்த குடும்பத்துக்கு வீடு



பேரின்பராஜா சபேஷ்

இலண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாக சபையின் நிதியுதவியால், சித்தாண்டி, - இலுக்குப்பொத்தானை கிராமத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு சுமார் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியில் செங்கலடி - பலாச்சோலை கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடு பயனாளியான கிருஸ்ணபிள்ளை சிறிதேவி குடும்பத்திடம் கையளிக்கப்பட்டது.

லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் கிராமிய சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், வீடு அமைப்பதற்கான நிதியை இலண்டனில் வசிக்கம் திரு திருமதி கிருசாந்தன் குடும்பத்தினர் வழங்கியிருந்தனர்.

உதவித் திட்டத்துக்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் நாகராஜா ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச சபை தவிசாளர் சி. சர்வானந்தன், பிரதேச சபை உறுப்பினர் வேல் பரமதேவா ஆகியோர் இணைந்து வீட்டைப் பயனாளியிடம் கையளித்தனர்.

## இயலாமையிலுள்ள முதியவர்களுக்கு உதவிகள்



நூறுல் ஹூதா உமர்

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது கிராம உத்தியோத்தர் பிரிவுக்கு உட்பட்ட சமுர்த்தி கொடுப்பனவு பெறுகின்ற தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களில் வயது முதிர்ந்து இயலாமை நிலையில் உள்ள முதியவர்களுக்கு கட்டில்களும் சக்கர கதிரையும் சிமெந்து பக்கெட்களும் சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல் ஜஃபரின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் பயனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக சென்று நேற்றுமுன்தினம் (26) வழங்கி வைக்கப்பட்டது. இவ்வேலைத் திட்டத்துக்கான நிதியை சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



## முதியோர் இல்லத்துக்கு உதவி



திருகோணமலை, அலஸ்தோட்ட புனித ஜோசப் முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு புதிய ஆடைகளை, 'காப்போம் தொண்டு நிறுவனம்' வழங்கி வைத்தது.
முதியோர் இல்லத்தின் பொறுப்பதிகாரி அருட் சகோதரி லூசினா தலைமையில் நேற்று முன்தினம் (26) நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே முரளிதரன், தொண்டு நிறுவனத்தின் பணிப்பாளர் கு. பிரதீப்கரன் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த உதவிகளுக்கான நிதி, திருமதி பத்மா குணதாசனால் (லண்டன்) வழங்கி வைக்கப்பட்டது.
பைஷல் இஸ்மாயில், மட்டு. துஷாரா

# பலசரக்கு கடையில் டீசல் வியாபாரம்

### ஒருவர் கைது; 120 லீற்றர் டீசல் மீட்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கல்முனை வீதியிலுள்ள பலசரக்கு கடையில் சட்டவிரோதமாக டீசல் வியாபாரத்தில் ஈடுபட்ட கடை உரிமையாளரின் மகனை நேற்று நேற்று முன்தினம் (26) இரவு கைது செய்துள்ளதுடன் 120 லீற்றர் டீசல், 80 தடைசெய்யப்பட்ட சிகரெட்டுகளை மீட்டுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

போதைபொருள் மற்றும் மதுபான ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கஜநாயக்கா தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட் ரி. கிருபா உள்ளிட்ட பொலிஸ் குழுவினர், சம்பவதினமான இரவு பலசரக்கு கடையை சுற்றிவளைத்து சோதனயிட்டபோது, அங்கு விற்பனைக்காக வைத்திருந்த 120 லீற்றர் டீசல், 80 சிகரெட்டுகளை மீட்டதுடன் கடை உரிமையாளரின் மகனையும் கைது செய்தனர்.

# இந்திய பட்டதாரிகளையும் அரச சேவையில் உள்வாங்கத் தீர்மானம்

எம். றொசாந்த்

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கிகரிக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகளையும் பட்டதாரி நியமனங்களில் உள்வாங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சரின் ஊடக பிரிவால் நேற்று (27) அனுப்பிவைக்கப்பட்ட செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: பிரதமர் தினேஸ் குணவர்த்தன மற்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த ஆகியோருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்த விடயம் தொடர்பில் பிரஸ்தாபித்தபோது, குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவில் தங்கியிருந்த காலப் பகுதியில், இந்திய பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று பட்டதாரிகளானவர்கள், சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ள நிலையில், அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அரச சேவைக்கான பட்டதாரிகள் ஆட்சேர்ப்புகளின் போது, வெளிநாட்டு பட்டதாரிகள் என்ற அடிப்படையில் நிராகரிக்கப்பட்டிருந்தனர்.

இதுதொடர்பாக, பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோருடன் பிரஸ்தாபித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பட்டதாரிகள் நியமனத்தின் போது, இந்திய பட்டதாரிகளும் உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுத்தினார்.

இந்நிலையில், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கிகரிக்கப்பட்ட பட்டதாரிகளை, அரச சேவையில் உள்ளீர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என குறித்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகவீன விடுப்பு போராட்டம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, கண்டாளை சுகாதார வைத்திய அதிகாரியின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, குடும்ப நல உத்தியோகத்தர்கள் நேற்று (27) சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில், கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் குடும்ப நல உத்தியோகத்தர் ஒருவரை, பொதுமக்கள் மத்தியில் வைத்து அவதூறாக பேசியதன் விளைவாக, மன உழைச்சலுக்கு உள்ளான குறித்த உத்தியோகத்தர், தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு உயிர் தப்பியருந்தார்.

குறித்த பிழரிவில், 13 குடும்ப நல உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வேண்டிய போதும், போதிய ஆளணி வளமின்மையால், ஒரு உத்தியோகத்தரே இரண்டு, மூன்று பிரிவுகளைப் பராமரிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இவ்வாறான நிலையில், தங்களுடைய பணியை முன்னெடுப்பதில் இடர்பாடுகள் காணப்படுவதுடன், குறித்த அதிகாரியால் தொடர்ச்சியாகத் தாங்கள் மனஉளைச்சலுக்கு ஆளாகவும் தெரிவித்தே, நேற்று சுகவீன விடுப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## இ.போ.ச பருத்தித்துறை சாலையில் கைகலப்பில் இறங்கிய ஊழியர்கள்

எம். றொசாந்த்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலை முகாமையாளரின் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பு தொடர்பில் கைது செய்யப்பட்ட ஊழியர்கள் 11 பேரையும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்று பிணையில் விடுவித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் , இலங்கை போக்குவரத்து சபையின் தலைமைக் காரியாலயத்தில் பணியாற்றிய அலுவலகர், பருத்தித்துறை சாலை முகாமையாளராக நியமிக்கப்பட்டார். அவருக்கு பருத்தித்துறை சாலையின் பெரும்பாலான ஊழியர்களின் எதிர்ப்பு நீடித்தது. அதனால் அவர், வடபிராந்திய போக்குவரத்து சபையின் அலுவலகமான கோண்டாவிலுக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், முகாமையாளர் நேற்று முன்தினம் (26) கொழும்பு அலுவலகத்துக்கு அறிவித்துவிட்டு, வடபிராந்திய முகாமையாளருக்கு அறிவிக்காமல், பருத்தித்துறை சாலைக்குச் சென்றுள்ளார். அதன்போது அங்கு எதிர்ப்பு நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்ப்புநிலை சிறிது நேரத்தில், கைகலப்பாக மாறியது.

அது தொடர்பில், அங்கு விரைந்த பருத்தித்துறை பொலிஸார், முகாமையாளரையும் அவருக்கு ஆதாரவான நால்வரையும் எதிர்ப்பாளர்கள் ஏழு பேர் என 11 பேரைக் கைது செய்தனர். இவர்கள் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது, தலா 10 ஆயிரம் ரூபாய் பிணை மற்றும் இரண்டு ஆள் பிணையில் விடுவிக்க கட்டளையிட்டார்.







## வவுனியாவில் பண்பாட்டு பெருவிழா


க. அகரன்

வவுனியா மாவட்ட பண்பாட்டு பெருவிழா நேற்று (27) வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்தார்.

இயல், இசை, நாடகம் என முத்தமிழின் பல்சுவை நிகழ்வுகளுடன் தமிழ், சிங்கள, இஸ்லாமிய கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன. இதன்போது, வவுனியாவில் கலை வளர்ச்சிக்காக செயற்பட்ட கலைஞர்களுக்கு 'வவுனியம்' விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## மன்னாரில் பெரும் போகம் ஆரம்பம்

மன்னார் நிருபர்



மன்னார் மாவட்டத்தில் 2022-2023 ஆம் ஆண்டுக்கான பெரும்போக விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். யோகராசா தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான், மடு, மன்னார், மாந்தை மேற்கு, முசலி ஆகிய பிரதேச செயலகப் பிரிகளில் பெரும்போக விவசாய செய்கைகளுக்கு உழவு நடிவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக 21ஆம் திகதி கட்டுக்கரை குளத்தில் இருந்து சிறு குளங்களுக்கு நீர் வைபவ ரீதியாக திறந்து விடப்பட்டதுடன் 2023 மார்ச் முதலாம் திகதி வரை, நீர் விநியோகம் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நெடுந்தீவு கடற்பரப்பில் ஏழு இந்திய மீனவர்கள் கைது

நிதர்சன் விநோத்



இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து, நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, ஏழு இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் (26) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர், படகையும் கைது செய்யப்பட்ட ஏழு மீனவர்களையும் மயிலிட்டிக்கு அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்தனர்.






# குரு ஜயந்தி விழா பூஜை நிகழ்வுகள்

நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய காயத்ரி பீடத்தின் ஸ்தாபகரும் காயத்ரி சித்தருமான ஸ்ரீ முருகேசு சுவாமியின் 89 ஆவது வருட ஜனன தின குரு ஜயந்தி விழா பூஜை நிகழ்வுகள், ஆலய தர்மகர்த்தா சக்திவேல் சந்திரமோகன் தலைமையில் நுவரெலியா காயத்திரி பீடத்தில் ஒக்டோபர் 26 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் விஷேட அபிஷேக அலங்கார பூஜைகள் நடைபெற்று ஸ்ரீ முருகேசு சுவாமியின் திருவுருவச்சிலை ஊர்வலமாக காயத்ரி பீடத்திற்கு எடுத்து செல்லப்பட்டு அங்கு காயத்ரி பூஜை, மிருத்யுஞ்ஜெய ஹோமம், குரு நல்லாசிப் பிரார்த்தனை மற்றும் அருளுபதேசம் நடைபெற்றன.

அதனை தொடர்ந்து காயத்ரி சித்தர் ஸ்ரீ முருகேசு மஹரிஷி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக நுவரெலியா மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் சிறியாந்த பீரிஸ் கலந்துக்கொண்டார்.

(எஸ்.கே குமார்)



# தத்தளிக்கும் பஸ்கள் தடுமாறும் பயணிகள்

■ சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகரிலுள்ள பிரதான பஸ் நிலையத்துக்கு செல்லமுடியாத நிலைமையே பயணிகளுக்கு ஏற்பட்டுள்ளது. பஸ்களுக்கும் தள்ளாடி, தட்டுதடுமாறி, நிலையங்களுக்கு சென்று, திரும்புகின்றன என பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

மழைக்காலங்களில் குழிகளில் நீர் நிரம்பிநிற்கும். பஸ்கள் பணிக்கும் போதுகூட நடந்து செல்லும் பயணிகளால் ஒதுங்கி செல்லமுடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது என்கின்றனர்.

அவ்வாறு ஒதுங்கி சென்றாலும் வேகமாக செல்லும் பஸ்கள் சேற்று நீரை அள்ளி, உடைகளின் மீது வீசி, சேற்றை பூசிவிடுகின்றன என பாதிக்கப்பட்ட பயணிகள் தெரிவிக்கின்றனர்.

சேற்றுக்குழிக்குள் பஸ்கள் விழுந்து விடாத வகையில் செலுத்திச் செல்வது என்பது கடினமாக காரியமாகுமென இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களின் சாரதிகள் பலரும் தெரிவிக்கின்றனர்.

பல வருடங்களாக இந்தத் தரிப்பிடத்துக்குச் செல்லும் வீதிகள் குன்றும் குழியுமாகவே இருக்கின்றன. பலரின் கவனத்துக்கு கொண்டுவந்த போதிலும், நிலைமையை எவரும் கவனத்தில் எடுப்பதாய் இல்லை. மழைக்காலங்கள் என்றால் பயணிகளால் நடந்து செல்லமுடியாது. பஸ்களைக் கண்டு ஒதுங்குவதற்கு கூட பாதுகாப்பான இடமில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பயணிகள் மட்டுமன்றி பாடசாலை மாணவர்களும், வெளி பிரதேசங்களில் இருந்து வந்துசெல்வோரும் கடுமையான அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். ஆகையால் மழைக்காலம் ஓய்ந்ததும், குன்று, குழிகளை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென உரிய தரப்பினருக்கு பாதிக்கப்பட்டோர் வலியுறுத்துகின்றனர்.



# இதுதான் பயணம்; இப்படித்தான் வாழ்க்கை

## நூல்கந்தூர மக்களின் துயரைத் துடைக்கவும்

■ நவி

தெல்தோட்டை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நூல்கந்தூர கீழ் பிரிவைச் சேர்ந்த மக்களும் பாடசாலை மாணவர்களும், நகருக்கு செல்லும் போது, ஆபத்தான முறையில் ஆற்றை கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஆற்றில் நீர் குறைவாக காணப்படும் போது இலகுவாக, ஆற்றை கடந்து செல்லும் மக்கள், வெள்ளம் ஏற்பட்டால், நீரேந்தும் பிரதேசங்களில் கடும் மழை பெய்தால். ஆற்றை கடந்து செல்லவே முடியாது.

நூல்கந்தூர கீழ் பிரிவு மக்கள், இந்த ஆற்றை கடந்து குறுக்கு வழியாகவே பயன்படுத்தி நகருக்கும், பாடசாலைக்கும் வைத்தியசாலைக்கும் செல்கின்றனர்.



மற்றைய வீதியில் பயணம் செய்தால் சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் நடந்தே செல்ல வேண்டும். இந்த ஆற்றை கடந்தால் 1/2 கிலோ மீற்றர் தூரத்துக்கு மட்டுமே பயணிக்க வேண்டும் என்றனர். தற்போது மழைக்காலம் என்பதால், அச்சத்துடனேயே பயணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறுக்கு வழியால் பயணிக்கும் போது பாம்பு உள்ளிட்ட ஜந்துகளின் அச்சுறுத்தல்களுக்கும் தாங்கள் முகங்கொடுப்பதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் கவனத்துக்கு பலமுறை கொண்டுவந்தாலும், எவரும் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்கின்றனர்.

# நெல், மரக்கறிக்கு யூரியாவில் பாரபட்சம்

■ எஸ். கே. குமார்



நெல் உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் சலுகைகள் மற்றும் நிவாரணங்கள் மலையக மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் அரசாங்கம் வழங்க வேண்டுமென மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்தியமாகாண சபை உறுப்பினருமான ஆர். இராஜாராம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு மூட்டை யூரியா 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் மலையகத்தில் மரக்கறி உற்பத்தி செய்யும் விவாசாயிகளுக்கு 29 ஆயிரம் ரூபாய்க்கே ஒரு மூட்டை யூரியா விற்பனை செய்யப்படுகிறது.

இதனால் மரக்கறிகளை உற்பத்தி செய்யும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். யூரியா வழங்குவதில் பாராபட்சம் காட்டாமல் மலையக மரக்கறி உற்பத்தியாளர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு மூட்டை யூரியா வழங்க வேண்டும் என்றார்.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் நெல் உற்பத்தியாளர்களுக்கு வெள்ள நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் மலையகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் மரக்கறி உற்பத்தியாளர்களுக்கு வெள்ள நிவாரணங்கள் வழங்கப்படுவதில்லை. இது ஒரு பாரபட்ச செயலாகுமென குறிப்பிட்டுள்ள அவர், பாரபட்சம் இல்லாது சகல விவசாயிகளையும் ஒரு தராசில் வைத்து பார்க்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# நிறையை கூட்டியதால் சரிபாதியாகும் சம்பளம்

■ சுதத் எச்.எம்.ஹேவா



பெருந்தோட்டக் கம்பனிகளில் சில, நாளாந்தம் பறிக்கவேண்டிய கொழுந்தின் நிறையை கூட்டியதால், தொழிலாளர்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என ப்ரொடெக்ட் சங்கத்தின் உபதலைவர் எம். மைத்திரி தெரிவித்துள்ளார்.

நாளாந்த சம்பளமாக 1,000 ரூபாயை வழங்குவதற்காக, நாளொன்றுக்கு 20 கிலோ கிராம் நிறையைக்கொண்ட பச்சை தேயிலை கொழுந்தை பறிக்கவேண்டுமென சில நிறுவனங்கள் கட்டாயப்படுத்தியுள்ளன. இதனால் உரிய சம்பளத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளத என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஹட்டனில் உள்ள அந்தச் சங்கத்தின் காரியாலயத்தில் ஒக்டோபர் 26ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கான 1,000 ரூபாய் சம்பளத்தை பெறவேண்டுமாயின் அந்த நாளில் 20 கிலோ கிராம் தேயிலைக் கொழுந்தை பறிக்கவேண்டும். எனினும், சில தோட்டங்களில் அது இயலாத காரியமாகும். சில தோட்டங்கள் முறையாக பராமரிக்கப்படவில்லை. நாட்டில் ஏற்பட்டிருக்கும் சீரற்ற வானிலையால் கொழுந்துகள் முறையாக வளர்வதில்லை. முறையாக பசளையிடுவதும் இல்லை. ஆகையால், பாரிய அசௌகரியங்களுக்கு தொழிலாளர்கள் முகங்கொடுத்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் இவ்வாறான அசௌகரியங்களுக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அந்தத் தோட்டக் குடும்பங்களும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிக்கிய சாரதிக்கு விளக்கமறியல்

■ ரஞ்சித் ராஜபக்ஷ



பாடசாலை மாணவனை விபத்துக்கு உள்ளாக்கிவிட்டு, தப்பியோடி தலைமறைவான நிலையில் இருந்த ஓட்டோ சாரதி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளார்.

கினிகத்ஹேன பொலிஸாரால் ஒக்டோபர் 26 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நபர், ஹட்டன் மாவட்ட நீதவான் பாருக் டீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். அதன்போதே, விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபரான 26 வயதான நபர், கினிகத்ஹேனையில் பாடசாலை மாணவன், வீதியை கடக்க முயன்றபோதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. விபத்து ஏற்பட்டதும் பாதிக்கப்பட்ட மாணவனை வைத்தியசாலையில் அனுமதிப்பதாகக் கூறி, அந்த மாணவனை அதே ஓட்டோவில் ஏற்றிக்கொண்டு சென்ற சாரதி, அவரிடம் 500 ரூபாயை கொடுத்துவிட்டு, மாணவனை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லாமல், இடைநடுவிலேயே இறக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளார்.

# அப்படித் திரிந்தவர் அதிரடியாக கைது

■ ஷேன் செனவிரத்ன

ஹெரோய்ன் மற்றும் போதையூட்டும் குளிசைகளை தம்வசம் வைத்துக்கொண்டு நகரத்தில் அங்குமிங்கும் சுற்றித்திருந்த 21 வயதான இளைஞனை அலதெனிய பொலிஸார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

சந்தேகத்துக்கு இடமான முறையில் சுற்றித்திரிவதை அவதானித்த பொலிஸார், அவரை விசாரணைக்கு உட்படுத்தியபோது, 2,340 மில்லி கிராம் ஹெரோய்ன், கெபிக்கா என்றழைக்கப்படும் 346 குளிசைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

போதையூட்டும் இந்தக் குளிசைகள் பாடசாலை மாணவர்களுக்கு ஆகக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்யும் வகையிலேயே அவர், மறைத்து வைத்திருந்தார் என்பது தெரியவந்தது. இந்நிலையில், ஹெரோய்ன் பெற்றுக்கொண்ட இடத்தை கண்டறிவதற்காக அவ்விளைஞனிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# போதையில் மிதந்து மரணித்த ‘முதிய ஜோடி’

■ எம். செல்வராஜா

வயது முதிர்ந்த கணவனும், மனைவியும் மதுவுக்கு அடிமையான நிலையில், மது போதையில் மயங்கி விழுந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின் மரணமாகியுள்ள சம்பவமொன்று பதுளை, வைக்கும்பர பெருந்தோட்டத்தில், 26 ஆம் திகதி மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்விருவருக்கும் மகளும், மகனும் உள்ளனர். திருமணம் முடித்து குடும்பத்தைவிட்டு பிரித்து மகன் வாழ்கின்றார். மத்திய கிழக்கு நாடொன்றில் மகள் தொழில் செய்து வருகின்றார். இவர் பெற்றோருக்கு அனுப்பும் பணத்தில் இவ்விருவரும் மதுவுக்கு அடிமையாகியுள்ளனர்.

இவ்விருவரும் கூடுதலாக மது அருந்தியதால் மயக்கமுற்று கீழே விழுந்துள்ளனர். அயலவர்கள் இவர்களை படல்கும்புரை அரசினர் மருத்துவமனையில் சேர்த்தனர். இவ்விருவரையும் பரிசோதனை செய்த டொக்டர்கள், இவர்கள் இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

# சந்திரிகாவின் கண்ணும் அவிழும் அரசியல் கைதிகளில் கைவிலங்கும்

தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி, விடுவிக்கப்படும் செயற்பாடுகள் பொதுவெளியில் பரவலாக பேசப்படும் விடயங்களாக மாறிவிட்டன. மீதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளில் சிலரை, 2023 பொங்கலுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பல தரப்பினரும் வலியுறுத்திவருகின்றனர்.

ஏதாவது பெருநாள்களில் குடும்பத்தினருடன் வெளியில் சென்று குதூகலிப்பதை, அந்த குடும்பங்களைச் சேர்ந்த பலரும் சுதந்திரமென நினைப்பர். அவ்வாறுதான், ஏதாவது பெருநாள்களில் அரசியல் கைதிகளுக்கும் விடுதலை கிடைக்கிறது. அதுவே அவர்களுக்கு கிடைத்திருக்கக்கூடிய பெரும் சுதந்திரமாகும். இவையெல்லாம் கடுமையான அழுத்தங்களின் பெறுபேறுகளாகும்.

சுதந்திர தினம், வெசாக் உள்ளிட்ட நாள்களில் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எனினும், அரசியல் கைதிகள் எவரும் அவ்வாறான தருணங்களில் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவில்லை. ஆக, சிறு குற்றங்களை புரிந்தவர்கள், சிறிய தண்டப்பணத்தை செலுத்த முடியாதவர்கள், வயதானவர்கள் மட்டுமே மன்னிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழான அரசாங்கத்தால், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை துரிதப்படுத்தப்பட்டுது. இதனை தமிழர் தரப்பினர் மட்டுமன்றி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் வரவேற்று கருத்துரைத்துள்ளார்.

“என்னைக் கொலை செய்ய முற்பட்டவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களை, சிறையில் அடைத்து வைத்திருப்பதால் எனது கண் மீளக்கிடைக்கப்போவதில்லை” எனத் தெரிவித்துள்ள சந்திரிகா, செய்த தவறை உணர்த்தி, புனர்வாழ்வளித்து விடுவிக்கவேண்டுமென தெரிவித்துள்ளார்.

கொலைக் குற்றவாளிகள், ஒத்துழைப்பு நல்கியோரை சிறையிலடைத்து வைத்திருப்பதால், கண் மீளக்கிடைக்க போவதும் இல்லை; தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டப்போவதும் இல்லை என, சந்திரிகா தெரிவித்திருப்பதை ஆழமாக சிந்திக்கவேண்டும். ஏனெனில், புலிகளுடன் சமாதான பேச்சுவார்த்தைக்கு பலமுறை முயன்றவர் மட்டுமன்றி, வடக்கு தமிழர்களின் மனங்களை வென்றவர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

‘மறப்போம், மன்னிப்போம்’ என்பதை கடைப்பிடித்திருந்தால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிருக்கலாம், கடந்தகால கசப்பான சம்பவங்களை பாடமாகக் கற்றுக்கொண்டு, அவ்வாறான சம்பவங்கள் எதிர்காலங்களிலும் இடம்பெறாதவகையில், தற்பாதுகாத்துக்கொண்டு, சந்தேகநபர்களையும் குற்றவாளிகளையும் புனர்வாழ்வளித்து பொதுமன்னிப்பு வழங்குவதே காலத்தின் தேவையாகும்.

எனினும், சர்வதேச நிறுவனங்கள், அமைப்புகளின் நெருக்குதல்களுக்காக பொதுமன்னிப்பு வழங்கிவிட்டு, ஏதாவதொரு சாக்குப்போக்கான குற்றச்சாட்டுகளை அந்த நபர்கள் மீதே அப்பட்டமாகத் திணித்து, மீண்டும் கைது செய்யும் செயற்பாடுகள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டமை ஒன்றும் புதிதல்ல. ஆகையால், அவ்வாறான நாடகத்தை மீண்டுமொரு தடவை அறங்கேற்றிவிடக்கூடாது.

பொதுமன்னிப்பில் வெளியேறும் தமிழ் அரசியல் கைதிகளும், மீதமிருக்கும் காலத்தை பிரயோசனமானதாய் கழிப்பதற்கும், சமூகத்தில் மதிப்புமிக்கவராய் உயர்வதற்கும் தேவையான ஏற்பாடுகளை செய்யவேண்டும். இவையே காலத்தின் தேவையாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

எந்த விடயத்திலும் அதீத மோகம் வைத்தலாகாது. மோகம் என்பது மயக்க நிலையில் ஓர் அம்சம்தான்.

விருப்பம் என்பது மோகம் அல்ல; விருப்பம் ஒரு வரையறைக்கு உட்பட்டது. ஆனால், மோகம் என்பது அறிவை அறுக்கப் பார்க்கும்; நல்ல எண்ணங்களைச் சிதைக்கும்.

ஒருவிடயத்தில் விருப்பம் இல்லாத ஒருவரின் மனதுக்குள், அந்த விடயத்தை வலிந்து புகுத்தக்கூடாது. இன்று அநேகரின் அணுகுமுறை, சுயநலன் காரணமாக ஒருவரிடத்தில் ஆசைத் தீயை மூட்டிவிடுகின்றனர்.

வார்த்தை ஜாலங்களால் நம்பவைத்தும், சிறிய உதவிகளைச் செய்தும் அப்பாவித்தனமானவர்களின் வாழ்க்கையில் விளையாடக்கூடாது.

ஆசை, உடன் பற்றி எரிக்கும் ஓர் ஆயுதம். இளம்தலைமுறைகள், கவர்ச்சி வலையில் எளிதாக அடிமைப்பட்டுக் கொள்கின்றனர். இதுவும் போதைதான்.

மது என்றால், அது போதை தரும் வஸ்து என்கின்றோம். சட்டவிரோதமான, மானிட தர்மத்துக்கு எதிரான எந்த நடவடிக்கைகளும் தன்னைத்தான் சிதைப்பதாகவே கருதப்படும்.

எவர் வாழ்க்கையிலும் புகுந்து விளையாடக் கூடாது. இத்தகைய செய்கைகளைச் செய்பவர்களை ‘அறம்’ மன்னிக்கமாட்டாது. விழிப்பு நிலைக்கு எதிரானதே மோகம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### காத்தான்குடி கடற்கரையில்
### மீன்பிடி படகுகள், தங்குமிடங்கள் சேதம்



கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலையால், காத்தான்குடி கடலில், பாரிய அலைகள் காணப்படுகின்றன. இதனால், ஏத்துக்கால் கடற்கரை மீனவர்களின் தங்குமிட குடிசைகள் உடைந்து சேதமடைந்துள்ளதுடன், சிறிய மீன்பிடி படகொன்றும் உடைந்துள்ளது. அதேபோன்று பூநொச்சிமுனையிலும் மீன்பிடி படகு உடைந்து சேதடைந்துள்ளது.

கடலில் காணப்படும் பாரிய அலைகளால், மீனவர்கள் தொழிலுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன் பிடி படகுகள், மீன் பிடி உபகரணங்கள் என்பவற்றை, வீதிக்கு கொண்டுசென்று நிறுத்தி வைத்துள்ளனர். இதனால் மீனவர்கள் பல தரப்பட்ட சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள். இதேபோன்று பூநொச்சிமுனை மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி ஏத்துக்கால் கடற்கரையில், ஏற்கெனவே கடலரிப்பு காணப்படுவதால், அப்பகுதியிலுள்ள கட்டடங்கள், சிறுசாலைகள், மீனவர் தங்குமிடக் கட்டடம் என்பவைகளும் பாதிக்கப்பட்டு இருப்பதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, கடலரிப்பைத் தடுக்கும் விதமாக, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து, மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுமாறும் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

எம்.எஸ்.எம் நூர்தீன்

### உலக பொருளாதார நெருக்கடி:

# பழி ஓரிடம்; பாவம் இன்னோரிடம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

உலகளாவிய ரீதியில் பணவீக்கம் அதிகரித்துள்ளது. அது ‘சுனாமி’ மாதிரி, தொடர்ச்சியாகப் பல நாடுகளைத் தாக்கிய வண்ணமுள்ளது. பணவீக்கத்துக்கு ஆளாகும் ஒவ்வொரு நாட்டிலும், பொருளாதார சீர்கேடு உருவாக்குகிறது. இது பல சந்தர்ப்பங்களில் கடுமையான அரசியல் நெருக்கடிக்கு வழிசெய்கிறது.

எரிசக்தி விலைகளின் அதிகரிப்பு, ஐரோப்பா எங்கும் எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்துள்ளது. எரிசக்தியின் அதிக விலை அதிகரிப்புக்கு எதிரான தொடர்ச்சியான போராட்டங்கள், பெல்ஜியம் முதல் செக் குடியரசு வரை நடத்தப்பட்டுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, பிரான்ஸ் மக்கள், பெட்ரோல் நிலையங்களில் பெட்ரோல் வாங்க நீண்ட வரிசையில் காத்திருந்தனர். எரிவாயு மற்றும் மின்சார விலைகள் ‘மலிவு நிலை’க்கு குறைக்கப்படும் வரை, எரிசக்தி கட்டணங்களை செலுத்த மறுத்து வேலைநிறுத்தத்தில் நுழையுமாறு, பிரித்தானியக் குடிமக்களுக்கு, ‘பணம் செலுத்த வேண்டாம் இயக்கம்’ (*Don’t Pay UK movement*) வலியுறுத்தியுள்ளது.

ஐரோப்பாவில் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்த எரிசக்தி விலைகள் குறித்து, தொடர்ச்சியாக கண்டங்கள் எழுந்துவருகின்றன. பல ஐரோப்பிய அரசுகள், சுவட்டு எரிபொருட்களுக்குத் திரும்பியிருப்பதானது, காலநிலை மாற்றச் செயற்பாட்டாளர்களின் எதிர்ப்புகளைத் தூண்டியுள்ளது.

இந்த உலகளாவிய பணவீக்கமும் அது உருவாக்கும் வாழ்க்கைத் தரத்தின் கீழ்நோக்கிய அழுத்தமும், உக்ரேன் போரால் ஏற்பட்டதாக அமெரிக்கா கூறுகிறது. இதன்மூலம், இப்போது உலகின் பொருளாதார நெருக்கடிக்கு ரஷ்யாவே காரணம் என்பதன் மூலம், ரஷ்யாவுக்கு எதிராக நாடுகள் திரளவேண்டும் என எதிர்பார்க்கிறது.

அமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டை ஆழமாக நோக்கினால், உண்மை வேறொரு திசையில் இருப்பது புரியும்.

உக்ரேன் போர், பெப்ரவரி 24ஆம் திகதி தொடங்கியது, ஆனால், அமெரிக்க பணவீக்கம், ஏற்கெனவே கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கடுமையாகவும் தொடர்ச்சியாகவும் உயர்ந்தவண்ணம் இருந்தது. 2020 மே மாதத்தில் அமெரிக்காவில் பொருட்களின் விலை உயர்வு 0.1% ஆக இருந்தது.

ஆனால், உக்ரேன் போருக்கு முன்பு, அதாவது 2022 ஜனவரிக்குள் விலைகள் 7.5% ஆக உயர்ந்தன. போருக்கு முன்பு அமெரிக்க பணவீக்கம் 7.4% உயர்ந்தது. ஓகஸ்ட் மாதத்தில், பொருட்களின் விலை உயர்வு 8.3% ஆக இருந்தது, இது போர் தொடங்கியதில் இருந்து 0.8% மட்டுமே உயர்ந்துள்ளது. 90% க்கும் அதிகமான அமெரிக்க விலை உயர்வுகள் உக்ரேன் போருக்கு முன்பு நடந்தன.

எனவே, உலகளாவிய பணவீக்கத்துக்கும் அதன் விளைவாக வாழ்க்கைத் தரம் குறைவதற்கும் ரஷ்யாவை, அமெரிக்கா குற்றம் சாட்டும்போது விமர்சன ரீதியாக சிந்திக்க வேண்டியது அவசியம்.

வட்டி விகிதங்களை விரைவாக உயர்த்துவதன் மூலம், அமெரிக்கா பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முனைந்தது. அமெரிக்க டொலரின் மதிப்பு செயற்கையான முறையில் அதிகரித்தது. இதனால், மேற்குலக நாடுகள் பணவீக்கத்தைச் சந்தித்தன.

இதேவேளை, அமெரிக்க டொலரில் தங்கியிருக்கும் வளர்முக நாடுகள் இன்னும் மோசமான பணவீக்கத்துக்குத் தள்ளப்பட்டன. அமெரிக்காவின் இந்தச் செயலால், இலங்கை போன்ற நாடுகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை நான்கு அடிப்படைகளில் நோக்கலாம்.

முதலாவதாக, உயரும் அமெரிக்க வட்டி விகிதங்கள், வளரும் நாடுகளின் நாணயங்களுக்கு எதிராக, டொலரின் நாணயமாற்று விகிதத்தை அதிகரிக்கின்றன. வழக்கமாக, அமெரிக்க டொலரில் நிர்ணயிக்கப்படும் இறக்குமதி விலைகள், இதனால் கணிசமாக அதிகரிக்கின்றன. இது வளர்முக நாடுகளுக்கு பணவீக்கத்தை மோசமாக்குகிறது.

இரண்டாவதாக, வளர்முக நாடுகளின் நாணயங்களுக்கு எதிராக, டொலரின் உயர்வானது, அந்நாடுகள் சர்வதேச கடன்களை திருப்பிச் செலுத்துவதில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. சர்வதேச கடன்கள், அமெரிக்க டொலர்களில் பெறப்பட்டவையாகும். எனவே, இது வளர்முக நாடுகளுக்கு அந்நியச் செலாவணி நெருக்கடியை ஏற்படுத்துகின்றன.

மூன்றாவதாக, தங்கள் நாணயமாற்று விகிதங்களில் மிகக் கடுமையான வீழ்ச்சியைத் தடுக்கவும், தங்கள் பொருளாதாரங்களில் இருந்து அமெரிக்காவுக்கு மூலதனம் வெளியேறுவதைத் தடுக்கவும் வளர்முக நாடுகள் தங்கள், வட்டி விகிதங்களை உயர்த்துகின்றன. இவ்வாறு வட்டிவீதம் உயர்த்தப்படுவதானது, அப்பொருளாதாரத்தை மந்தநிலையை நோக்கித் தள்ளுகின்றது.

நான்காவதாக, மேற்குலக நாடுகளில் ஏற்பட்டுள்ள மந்தநிலையானது, பொருட்களுக்கும் சேவைகளுக்குமான கேள்வியைக் குறைக்கின்றது. இதனால், மேற்குலக நாடுகளுக்கு பொருட்களையும் சேவைகளையும் ஏற்றுமதி செய்யும் வளர்முக நாடுகள் நெருக்கடிக்கு உள்ளாகின்றன.

அமெரிக்காவின் பணவீக்கத்துக்கு என்ன காரணம் என்ற வினா எழுவது இயல்பானது. இது பற்றி அமெரிக்காவின் முன்னாள் திறைசேரி செயலாளர் லாரி சம்மர்ஸ், 2021 மேயில் பின்வருமாறு எச்சரித்திருந்தார்: “நாங்கள் பணவீக்கப் பக்கத்தில் மிகவும் கணிசமான அபாயங்களை எடுத்துக்கொள்கிறோம். நாங்கள் பணத்தை அச்சிடுகிறோம்; அரசாங்கப் பத்திரங்களை உருவாக்குகிறோம்; மேலும் நாங்கள் முன்னெப்போதுமில்லாத அளவில் கடன் வாங்குகிறோம்” என்றார்.

அமெரிக்க வரவு-செலவுத் திட்டத்தின் பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 26% ஆக உயர்ந்தது. அமெரிக்க பண விநியோகத்தில் 27%ஐ எட்டியது. இவை இரண்டும், அமெரிக்க சமாதான கால வரலாற்றில் மிக அதிகமாகும். தேவையில் மிகப்பெரிய அதிகரிப்பு ஏற்பட்டு, விநியோகத்தில் பெரிய அதிகரிப்பு இல்லாததால், அமெரிக்க பணவீக்கம் அதிகரித்து வருவது தவிர்க்க முடியாததாக உள்ளது.

இங்கு பணவீக்கத்தின் சமூக பங்கைப் புரிந்துகொள்வதும் முக்கியம். பணவீக்கம், தேவை - விநியோகத்தை விட அதிகமாக இருப்பதைக் காட்டியது. இது பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையில், மேல்நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தியது. எனவே, வழங்கல் அதிகரிப்பு இல்லாததால், தேவை குறைக்கப்பட்டது. இங்கு, முக்கிய சமூகக் கேள்வி யாதெனில், இதை சமாளிக்க எந்த அமெரிக்க அரசாங்கத்தின் எந்தச் செலவினங்கள் குறைக்கப்படும்?

மீண்டுமொருமுறை மீதமுள்ள சமூகநலன்களை வெட்டுவதையே, அமெரிக்கா செய்தாக வேண்டும். இது அமெரிக்கர்களின் வாழ்க்கைத் தரத்தை இன்னும் மோசமான நிலைக்குத் தள்ளும். தனக்கு அடுத்துள்ள ஒன்பது நாடுகளின் மொத்த இராணுவச் செலவை விட, அமெரிக்காவின் இராணுவச் செலவு உலகிலேயே அதிகம். உலகில் உள்ள மற்ற பொருளாதாரங்களைக் காட்டிலும் அமெரிக்கா தனது பொருளாதாரத்தின் ஒரு பங்காக, சுகாதாரப் பாதுகாப்பிற்கு அதிக விகிதத்தை செலவிடுகிறது. ஆனால், அமெரிக்கர்களின் ஆயுட்காலம் 77 ஆண்டுகள் மட்டுமே! மற்ற உயர் வருமானம் கொண்ட பொருளாதார நாடுகளின் சராசரி ஆயுட்காலம் 83 ஆண்டுகள் ஆகும்.

ஆனால், அமெரிக்க இராணுவச் செலவைக் குறைப்பதோ முழுமையான இலவச சுகாதாரப் பாதுகாப்பை நியாயப்படுத்துவதோ, அமெரிக்காவில் உள்ள ஆயுத உற்பத்தியாளர்கள், பல்தேசிய மருந்துக் கம்பெனிகளின் சொந்த நலன்களுக்கு எதிரானதாகும்.

அதேவேளை, அமெரிக்க இராணுவ செலவினங்களைக் குறைப்பது, அதன் வெளிநாட்டு இராணுவக் கொள்கைக்கு நெருக்கடியைக் கொடுக்கும். ஆயுத உற்பத்தியாளர்கள், பல்தேசிய மருந்து நிறுவனங்களை ஆதரிப்பதில் அமெரிக்க அரசாங்கத்தின் சொந்த நலன்கள் பின்னிப் பிணைந்துள்ளன.

எனவே அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாது என்பதை உறுதியாக நம்பலாம். அமெரிக்கர்களே மிகப்பெரிய நெருக்கடிகளை எதிர்கொள்கிறார்கள். ஆனால், அமெரிக்கா தொடர்ந்தும் பல மில்லியன் கணக்கில் பணத்தையும் ஆயுதங்களையும் உக்ரேனுக்கு வழங்குகிறது. அதன்மூலம், உலகின் கவனம் அங்குள்ளவாறு பார்த்துக் கொள்ளப்படுகிறது. ஆனால், உலகளாவிய நெருக்கடி எம்காலடியில் வெடிகுண்டாய் வெடிக்கக் காத்திருக்கிறது.

இப்போது உலகளாவியுள்ள இந்தப் பொருளாதார நெருக்கடி புதிதல்ல. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர், அமெரிக்க பெடரல் ரிசர்வ் உருவாக்கப்பட்டதில் இருந்து, ஒவ்வொரு பெரிய நிதிச் சந்தை சரிவும் அவ்வங்கியின் அரசியல் நோக்கங்களுக்காக வேண்டுமென்றே தூண்டப்பட்டு வந்திருக்கிறது.

இன்று நிலைமை வேறுபட்டதல்ல! தெளிவாக அமெரிக்க பெடரல் அதன் வட்டி விகித ஆயுதத்துடன், மனித வரலாற்றில் மிகப் பெரிய ஊக நிதிக் குமிழியை வெடிக்க வைத்துள்ளது. ஆனால், சோகம் யாதெனில் அது உருவாக்கிய குமிழியையே இந்த வட்டிவீத அதிகரிப்பு இல்லாமல் செய்துள்ளது.

1931ஆம் ஆண்டு ஆஸ்திரிய கிரெடிடன்ஸ்டால்ட் அல்லது செப்டெம்பர் 2008 இல் லெஹ்மன் பிரதர்ஸ் தோல்வி போன்ற உலகளாவிய விபத்து நிகழ்வுகள் எப்போதும் சுற்றளவில் தொடங்குகின்றன. அவ்வாறான ஒன்றை நோக்கியே நாம் நகர்கிறோம்.

ஆனால், உக்ரேன் யுத்தம் நல்லதொரு கவனக் கலைப்பான். ரஷ்யா மீது எல்லாப் பழியையும் போட வேண்டியதுதான். இவை அனைத்தையும் நன்கறிந்தே ‘வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல்’ ஆசிரியர் குழு பின்வருமாறு குறிப்பிட்டது. ‘இது புட்டினின் பணவீக்கம் அல்ல; இந்தப் பணவீக்கம் வொஷிங்டனில் உருவாக்கப்பட்டது’.



# பருகும் யோகட் பானம் அறிமுகம்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தின், விலங்கு விஞ்ஞானத் துறையால் கண்டுபிடிக்கப்பட்ட 'வில்வம் பழச்சாறு கலந்த பருகும் யோகட்' பானத்தில் அறிமுக நிகழ்வு, அண்மையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

விவசாய பீடத்தின் விலங்கு விஞ்ஞானத் துறையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, சேதன முறையில் உற்பத்தி செய்யப்படக்கூடிய வில்வம் பழச்சாறு கலந்த பருகும் யோகட்டுக்கான உற்பத்தி ஒப்பந்தம் 2021ஆம் ஆண்டு, யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக இணைப்பு அலுவலகத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவில் அமைந்துள்ள முல்லை பாற்பொருள் உற்பத்தி நிலையத்துடன் மேற்கொள்ள ப்பட்டிருந்தது.

அந்த ஒப்பந்தத்துக்கமைய உற்பத்தி செய்யப்பட்டட வில்வம் பழச்சாறு கலந்த பருகும் யோகட்டை சந்தைப்படுத்தும் செயன்முறை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா, முல்லை பாற்பொருள் உற்பத்தி நிலையத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், ஜெய்கா செயற்றிட்ட அதிகாரிகள், விவசாய பீட அதிகாரிகள், யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக இணைப்பு அலுவலகத்தின் பணிப்பாளர், பல்கலைக்கழகப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் பெண்களுக்கு நட்பான ஒரு பணியிடம்




Satynmag CIMA பெண்களுக்கு நட்பான பணியிட விருதுகள் 2022 வழங்கும் நிகழ்வில் யூனியன் அஷ்யூரன்ஸ் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது. பெண்களுக்கு தமது கடமைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அவசியமான சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தமைக்காக, இந்தப் பெருமைக்குரிய விருதுகள் வழங்கும் நிகழ்வில் நிறுவனம் இரண்டு பெருமைக்குரிய விருதுகளை தனதாக்கியிருந்தது.

இலங்கையில் பெண்களுக்கு நட்பான பணியிடக் கலாசாரத்தைக் கொண்டுள்ளமைக்காக, இலங்கையின் சிறந்த பெண்களுக்கு நட்பான பணியிடங்கள் எனும் விருதையும், 'She Thrives Award' எனும் பிரிவு விருதையும் யூனியன் அஷ்யூரன்ஸ் தனதாக்கியிருந்தது.

நிறுவனத்தின் அடிப்படைப் பெறுமதிகள், அதன் வெற்றிகரமான செயற்பாடுகளில் பங்களிப்பு வழங்குகின்றன. இதில் எந்தப் பாலினம் அல்லது இதர பாகுபாடுகள் எதுவுமின்றி, ஊழியர்களை திறமைகளின் அடிப்படையில் கௌரவிப்பது அடங்கியுள்ளது. பன்முகத்தன்மையில் நிறுவனம் அதிகளவு கவனம் செலுத்துவதுடன், ஒவ்வோர் ஊழியருக்கும் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு உகந்த பணியிடத்தை ஏற்படுத்திக் கொடுப்பதில் நிறுவனம் கவனம் செலுத்துகின்றது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "இந்தப் பெருமைக்குரிய விருதுகளை சுவீகரித்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். கடந்த காலங்களில் நாம் கட்டியெழுப்பியுள்ள முன்னேற்றகரமான கலாசாரத்துக்கு எடுத்துக்காட்டாக இந்த விருதுகள் அமைந்துள்ளன. பெண்களுக்கு நட்பான பணியிட கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிப்பது மற்றும் எமது சகல ஊழியர்களுக்கு ஒரே மாதிரி தமது திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பளிப்பது போன்றவற்றின் அடிப்படையில் இது அமைந்துள்ளது. மேலும், இலங்கையில் பெண்களுக்கு நட்பான கலாசாரத்தைக் கொண்ட நிறுவனமாக கௌரவிக்கப்படுவது மிகவும் பெருமைக்குரிய விடயமாக அமைந்திருப்பதுடன், இதனூடாக, எமது ஊழியர்களை எவ்வாறு நடத்துகின்றோம், அவர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளோம் என்பதை உறுதி செய்கின்றது.

எமது ஊழியர் கொள்கை என்பது 'ஓர் அணி- ஓர் இலக்கு' என்பதை மையமாகக் கொண்டு அமைந்திருப்பதுடன், 'நாம்' என்பதை 'நான்' என்பதற்கு மேலாக உணர்த்துவதாக அமைந்துள்ளது. சகல ஊழியர்களும் தமது தொழில்நிலை இலக்குகளை எய்துவதற்கு அமைவாக வலுவூட்டப்பட்டுள்ளதுடன், அவர்களின் வளர்ச்சிக்கு ஊக்குமளிக்கப்படுகின்றனர்" என்றார்.

இந்த விருதுகளைப் பெற்றுக் கொண்டமை தொடர்பில் மக்கள் பிரதம அதிகாரி இம்தியாஸ் அனீஃவ் கருத்துத் தெரிவிக்கையில், "தொழிற்றுறையில் நாம் எய்தியுள்ள பெருமளவு முன்னேற்றங்கள் தொடர்பில், யூனியன் அஷ்யூரன்ஸ் பெருமை கொள்கின்றது. எமது ஊழியர்களுக்குச் சிறந்த பணியிடத்தையும் பணியாற்றுவதற்கு சிறந்த கலாசாரத்தையும் வழங்குவதாக அமைந்துள்ளது. பெண்கள் தமது பணி மற்றும் பிரத்தியேக வாழ்க்கை இடையே சமநிலையை பேணுவதில் எதிர்நோக்கக்கூடிய சவால்களை இல்லாமல் செய்வதில் எமது கவனம் காணப்படுவதுடன், சகல ஊழியர்களுக்கும் சமத்துவமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்துள்ளது. இதனை எய்துவதற்கு, பெண்களுக்கு நட்பான பல செயற்பாடுகளை நாம் செயற்படுத்தி, எமது பெண் ஊழியர்களுக்கு ஊக்கமளிக்கும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கின்றோம். நிறுவனத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு எமது ஊழியர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். எமது முன்நோக்கிய சிந்தனை முயற்சிகளான அரவணைப்பு, பயிற்றுவிப்பது மற்றும் அவர்களை விருத்தி செய்து அவர்களின் உண்மையான ஆற்றலை எய்துவதற்கு வலுவூட்டுவோம்" என்றார்.

இலங்கையின் பொதுப் பட்டியலிடப்பட்ட மாபெரும் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் ஒன்றான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் துணை நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. ONE JKH கொள்கையின் அங்கமாக நிறுவனம் அமைந்திருப்பதுடன், பணியாளர்கள் மத்தியில் பன்முகத்தன்மையை பெறுமதியளிப்பதில் கவனம் செலுத்துவதுடன், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸில் வாழ்க்கை உள்ளடக்கமானதாக அமைந்திருப்பதாக அமைந்துள்ளது. மதம், இனம், பாலின அடையாளம், பாலின அமைவு, வயது மற்றும் ஆற்றல் போன்றன எதுவாக இருந்தாலும், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் குழுமத்தினுள் அனைவரும் ஒரே விதமாகவே நடத்தப்படுவர்.

கோவை

கார் வெடிப்பு சம்பவம்:

# வெடிபொருட்கள் இணையவழி கொள்வனவு

கோவை கார் வெடிப்பு சம்பவத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட வேதிப் பொருட்களை ஜமேஷா முபின், இணையவழியின் ஊடாகப் பதிவு செய்து பெற்றதாக பொலிஸ் ஆணையாளர் பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கோவை உக்கடம் அருகே உள்ள கோட்டைமேடு வழியாக ஒக்டோபர் 23 ஆம் திகதி அதிகாலை 4.10 மணிக்கு சென்ற காரொன்று, சங்கமேஸ்வரர் கோவில் முன்பு வேகத்தடையை கடந்த போது திடீரென வெடித்து தீப்பிடித்தது.

விசாரணையில் உக்கடம் ஜி.எம். நகரை சேர்ந்த ஜமேஷா முபின் என்பவர் உயிரிழந்ததும் தெரியவந்தது. இந்த நிலையில் முபினின் வீட்டில் ஆய்வு செய்யப்பட்டது. வெடிபொருட்கள் தயாரிப்பதற்கான பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

இதுகுறித்து கோவை பொலிஸ் ஆணையாளர் பாலகிருஷ்ணன், ஏஎன்ஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், முபினின் வீட்டில் கைப்பற்றப்பட்ட மூலப்பொருட்கள் குறைந்த திறனுடைய வெடிகுண்டுகள் தயாரிக்க பயன்படுபவையாகும். இதிலிருந்து அவர் மேலும் நிறைய வெடிகுண்டுகளை தயாரிக்க திட்டமிட்டிருந்தது தெரியவருகிறது.

ஆறு பேர் கைது செய்யப்பட்டதும் அல்லாமல், நிறைய பேரிடம் இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகிறோம். வெடிப்பொருட்களை முபின் எப்படி வாங்கினார் என்பதை கண்டறிய முயன்ற போது அவை இணையவழி



வணிக நிறுவனங்களான அமேசான், ஃபிளிப்கார்ட்டில் வாங்கப்பட்டுள்ளமை தெரியவந்தது என்றார்.



மும்பை

# கணவர் மீதான அவதூறு சித்திரவதைக்குச் சமம்

புனேயை சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிக்கும், அவரது 50 வயது மனைவிக்கும் விவாகரத்து வழங்கி 2005 ஆம் ஆண்டு குடும்பநல நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து இருந்தது.

இந்த உத்தரவை எதிர்த்து இராணுவ அதிகாரியின் மனைவி மும்பை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். கணவர் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி; குடிகாரர், பெண் மோகம் கொண்டவர் என குற்றம்சாட்டியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணையின் போது, இராணுவ அதிகாரி உயிரிழந்தார். எனினும் அவரின் வாரிசை எதிர்மனுத்தாரராக சேர்த்து உயர்நீதிமன்றம் விசாரணை நடத்தியது.

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி, மனுத்தாரர் இராணுவ அதிகாரியிடம் இருந்து அவரது பிள்ளைகள் மற்றும் பேரக்குழந்தைகளை பிரித்து, அவருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியதாக வாதிட்டார். இதையடுத்து நீதிபதிகள், தேவையில்லாமல் கணவரின் குணம் பற்றி பொய்யான குற்றச்சாட்டை மனைவி கூறுவது சமூகத்தில் அவரின் மதிப்பை கெடுக்கும். இது சித்திரவதைக்கு சமம் என்றனர்.

மும்பை

# சிறுமியை "ITEM" என அழைத்தவருக்கு சிறை

16 வயதான சிறுமியை "ITEM" என அழைத்த நபருக்கு ஒன்றரை ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து மும்பை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

16 வயது சிறுமி ஒருவர், 2015 ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் திகதி மதியம் 2.15 மணியளவில் பாடசாலையில் இருந்து திரும்பி வந்துகொண்டிருந்த போது, அங்கு அமர்ந்திருந்த 25 வயது தொழிலதிபர், அந்த சிறுமியின் பின்னால் சென்று, சிறுமியின் தலை முடியை இழுத்து, தகாத வார்த்தையால் திட்டியுள்ளார். அந்த சிறுமியை "ITEM" எனவும் கூறியுள்ளார்.

சம்பவம் குறித்து சிறுமி தனது தந்தையிடம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மும்பை போக்சோ நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி வழக்கு தொடர்ந்தார். இதற்கு தீர்ப்பு வழங்கிய மும்பை போக்சோ நீதிமன்ற சிறப்பு நீதிபதி எஸ். ஜெ.அன்சாரி, சிறுமியை ஐட்டம் (ITEM) என அழைத்த தொழிலதிபருக்கு ஒன்றரை ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டார்.

ஸ்ரீகாகுளம்

# அதிர்ச்சியை ஏற்படுத்திய குரங்குகள் உயிரிழப்பு

ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ள சிலகம் பகுதியில் அடர்ந்த புதருக்குள் இறந்த நிலையில் 40 குரங்குகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

முதலில் குரங்குகள் மயங்கிய நிலையில் இருந்த போது, குரங்குகளை பாதுகாக்கும் நோக்கில் அங்குள்ள மக்கள் சிலர் குரங்குகளுக்கு உணவு அளித்துள்ளனர்.

ஆனால், குரங்குகள் உண்ணும் நிலையில் இல்லை என்பதை உணர்ந்து, பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். அங்கு விரைந்த பொலிஸார் குரங்குகளின் சடலங்களை மீட்டு உடற்கூறாய்விற்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

யாரோ ஒரு தரப்பினர் டிராக்டரில் குரங்குகளை கொண்டு வந்து விட்டதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சென்னை

# பார்த்தால் தெரியும் ரயில் கழிவறை

ரயில் பெட்டியின் கழிவறையின் ஜன்னல், பயண மேடையில் இருந்து பார்க்கும் போது வெளியில் தெரியும் வண்ணம் ஒளிவு மறைவின்றி இருந்துள்ளதுமை பெரிதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள சம்பவம் சென்னையில் இடம்பெற்றுள்ளது.

எப்போதும் ஒட்டப்படும் கறுப்பு பேப்பர் ஒட்டப்படாமல் இருந்ததால் கழிவறைக்குள் நடப்பதைப் பார்க்கும் விதமாக அந்த ஜன்னல் இருந்துள்ளது என ரயில் பயணி ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். சென்னை எழும்பூலிருந்து ஹைதராபாத் பயணித்த ரயிலிலேயே இவ்வாறு இருந்துள்ளது.

இதுதொடர்பில், ரயில் அதிகாரியிடம் அந்தப் பயணி முறையிட்டுள்ளார். எனினும், அவர் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. இணையவழியில் முறைப்பாடு செய்யுமாறு அந்த அதிகாரி கூறியுள்ளார் என தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள அந்த பயணி, ஆனால் 10 நாள்களான பின்பும் எந்தப் பதிலும் தனக்கு அளிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புதுடெல்லி

# பாலியல் ஆதாயத்துக்கு பதிலாக வேலை

பதவிக் காலத்தில், 20 க்கும் மேற்பட்ட பெண்களை தனது இல்லத்துக்கு அழைத்து சென்றதாகவும். அவர்களில் சிலருக்கு பாலியல் ஆதாயத்துக்குப் பதிலாக வேலையும் வழங்கி உள்ளார் என அந்தமான் நிக்கோபார் தீவுகளின் முன்னாள் தலைமைச் செயலாளர் ஜிதேந்திர நரேனுக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 21 வயது பெண்ணொருவர் முறைப்பாடு செய்துள்ளார். கூட்டு பலாத்காரம் மற்றும் பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றம்சாட்டி உள்ளார்.

வேலை தேடியபோது ஹோட்டல் உரிமையாளர் மூலம் தொழிலாளர் ஆணையருக்கு அறிமுகமானேன். அவர் என்னை, தலைமைச் செயலாளரின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு எனக்கு மதுபானம் வழங்கப்பட்டது. ஆனால் நான் அதனை மறுத்துவிட்டேன். அதைத் தொடர்ந்து, அந்த இரண்டு பேரால் நான் கொடூரமாகவும் பாலியல் ரீதியாகவும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டேன் என அப்பெண் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு மீண்டும் அதே போல் பாலியல் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்,




இதுகுறித்து யாரிடமும் தெரிவிக்க வேண்டாம் என்று மிரட்டப்பட்டதாகவும் அந்தப் பெண் கூறினார்.



சம்பியன்ஸ் லீக்:

# வெளியேற்றப்பட்ட பார்சிலோனா, அத்லெட்டிகோ மட்ரிட்

சம்பியன்ஸ் லீக்கிலிருந்து ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகங்களான பார்சிலோனா, அத்லெட்டிகோ மட்ரிட் ஆகியன வெளியேற்றப்பட்டுள்ளன.

செக் குடியரசுக் கழகமான விக்டோரியா பிளேஸனை இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் வெளியேறியமையைத் தொடர்ந்தே பார்சிலோனா தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற ஜேர்மனியக் கழகமான பயேர் லெவர்குசனுடனான போட்டியை சமப்படுத்தியதைத் தொடர்ந்தே அத்லெட்டிகோ மட்ரிட் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.



# பினுரவை அசித மூலம் பிரதியிட்ட இலங்கை

இருபதுக்கு - 29 உலகக் கிண்ணத் தொடருக்கான தமது குழாமில், காயமடைந்த வேகப்பந்துவீச்சாளர் பினுர பெர்ணாண்டோவை வேகப்பந்துவீச்சாளர் அசித பெர்ணாண்டோ மூலம் இலங்கை பிரதியிட்டுள்ளது.

இதேவேளை, வேகப்பந்துவீச்சாளர் மதீஷ பத்திரண, விக்கெட் காப்பாளர் நிரோஷன் டிக்வெல்ல ஆகியோர் மேலதிக வீரர்களாக அவுஸ்திரேலியாவுக்கு குழாமிலுள்ள வீரர்கள் காயமடைந்ததன் காரணமாக அழைக்கப்பட்டுள்ளனர்.

## 'Race the Pearl' சைக்கிளோட்டப் போட்டி

தெற்கிலிருந்து வடக்கே 600 கிலோ மீட்டர் தூரத்தை உள்ளடக்கியதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 24 மணி நேர சைக்கிளோட்டப் போட்டியின் ஐந்தாவது சுற்று 'Race the Pearl' 2022 நவம்பர் 5, தென் மாகாணத்தில் உள்ள தேவேந்திர முனையிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

ஆறு சிறந்த சைக்கிள் ஓட்டுநர்கள், அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர், பிரிட்டனைச் சேர்ந்த மூன்று பேர் மற்றும் இரண்டு இலங்கையர்கள் 'Race the Pearl' போட்டியை வழிநடத்துவார்கள். மேலும் 50-க்கும் மேற்பட்டோர் இந்த சைக்கிளோட்டப் போட்டியில் இணைந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



தேவேந்திர முனையில் ஆரம்பமாகி வடக்கில் பருத்தித்துரையை அடையவுள்ளதுடன், இது ஐந்து சுற்றுக்களைக் கொண்டுள்ளது. முதற்கட்டமாக தேவேந்திர முனை முதல் வெல்லவாய வரையிலான 145 கிலோ மீற்றர் தூரமும், இரண்டாம் கட்டமாக வெல்லவாய முதல் மஹியங்கனை வரையிலான 116 கிலோ மீற்றர் தூரமும் மூன்றாம் கட்டமானது மஹியங்கனையிலிருந்து தம்புள்ளை வரையிலான 92 கிலோ மீற்றர்களை உள்ளடக்கியும் தம்புள்ளையில் இருந்து ஆரம்பமாகி வவுனியாவில் முடிவடையும் நான்காம் கட்டத்தின் தூரம் 106 கிலோ மீற்றர்களாகவும், கடைசி கட்டம் வவுனியா மற்றும் பருத்தித்துறைக்கு இடையில் 142 கிலோமீற்றர்களாகவும் உள்ளது.



இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# நெதர்லாந்தை வென்ற இந்தியா

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், சிட்னியில் நேற்று நடைபெற்ற நெதர்லாந்துக்கெதிரான குழு இரண்டு சுப்பர் - 12 போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 179/2 (20 ஓவ. )

(துடுப்பாட்டம்: விராட் கோலி ஆ.இ 62 (44), றோஹித் ஷர்மா 53 (39), சூரியகுமார் யாதவ் ஆ.இ 51 (25) ஓட்டங்கள்)

நெதர்லாந்து: 123/9 (20 ஓவ. )

(பந்துவீச்சு: புவ்னேஷ்வர் குமார் 2/9 [3], அக்ஸர் பட்டேல் 2/18 [4], இரவிச்சந்திரன் அஷ்வின் 2/21 [4], மொஹமட் ஷமி 1/27 [4])

போட்டியின் நாயகன்: விராட் கோலி

இந்நிலையில், மெல்பேணில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெற்றவுள்ள குழு ஒன்று போட்டியில் ஆப்கானிஸ்தானும், அயர்லாந்தும் மோதவுள்ளதுடன், பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் அவுஸ்திரேலியாவும், இங்கிலாந்தும் மோதவுள்ளன.



இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# பங்களாதேஷை தோற்கடித்த தென்னாபிரிக்கா

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், சிட்னியில் நேற்று நடைபெற்ற பங்களாதேஷுடனான குழு இரண்டு சுப்பர் - 12 போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா துடுப்பெடுத்தாடிய போது, ஆரம்பத்திலேயே தஸ்கின் அஹ்மட்டிடம் பவுமாவை இழந்தது. எனினும், றைலி றொஸோவின் 109 (56), குயின்டன் டி கொக்கின் 63 (58) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், முஸ்தபிசூர் ரஹ்மான் 4-0-25-0 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.


206 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், அன்றிச் நொர்கியா (4), ககிஸோ றபாடா, தப்ரையாஸ் ஷம்சி (3), கேஷவ் மஹராஜ்ஜிடம் வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 16.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்களையே பெற்று 104 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக றொஸோ தெரிவானார்.

ரோம்

# ஆபாச படம் பார்க்கும் கன்னியாஸ்திரிகள்

## போப் பிரான்சிஸ் வேதனை



"கன்னியாஸ்திரிகள் மற்றும் பாதிரியார்கள் ஒன்லைன் வாயிலாக ஆபாசப் படங்களைப் பார்க்கின்றனர்" என போப் ஆண்டவர் பிரான்ஸில், கவலை தெரிவித்துள்ளார்.

ரோமில் அண்மையில் நடந்த மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "பக்தியையும் அன்பையும் பரப்ப வேண்டிய கன்னியாஸ்திரிகள், பாதிரியார்கள் ஒன்லைனில் ஆபாச படங்களைப் பார்க்கின்றனர். சமூக ஊடகம் என்பது பலரின் கைகளில் இருக்கும் ஒரு தீமை. பாமரர்கள் முதல் பாதிரியார்களிடம் வரை ஆபாசம் என்ற பிசாசு சமூக ஊடகம் மூலமாக நுழைகிறது" எனக் கவலை தெரிவித்துள்ளார்.

மேலும் பணிவாகவும் தவறான வழிகளில் செல்லாமலும், அகம்பாவம் இல்லாமலும், கிறிஸ்தவராக இருப்பது தொடர்பான மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள டிஜிட்டல் கருவிகளை பயன்படுத்த வேண்டும் என்றும் வருங்கால மதகுருக்களிடம் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஈரான்



# ஏஞ்சலினா ஜூலி போல் தோற்றமான பெண்

ஈரானின் தெஹ்ரான் பகுதியில் வசித்து வருபவர் தபார். இவர் நடிகை ஏஞ்சலினா ஜூலியின் தோற்றத்தை ஒத்த ஸோம்பி போல் தோற்றமளிக்கும் தனது புகைப்படங்களை இணையத்தில் வெளியிட்டதன் மூலம் பிரபலமடைந்தார்.
இவர் ஆரம்பகாலங்களில் தன்னை ஏஞ்சலினா ஜூலி போல் மாற்றிக்கொள்ள 50க்கும் மேற்பட்ட அறுவைச் சிகிச்சைகள் செய்துள்ளார்.

எனினும் இதன் விளைவாக அவரது தோற்றம் பயங்கரமாக மாறியதாகக் கூறப்படுகின்றது.
இந்நிலையில், இதுகுறித்து தனியார் தொலைக்காட்சிக்கு செவ்வியளித்த அவர், "மேக்கப் மற்றும் தந்திரங்கள் மூலம் எனது ஸோம்பி தோற்றம் வெளியானது. அது அறுவை சிகிச்சையின் விளைவாக இல்லை. அத்துடன் நான் எப்போதும் புகழுடன் இருக்க விரும்பியதால் இதைச் செய்தேன். ஒரு நடிகையாவதைவிட இது மிகவும் எளிதான ஒன்று" எனவும் தெரிவித்துள்ளார்.
இந்நிலையில் அவர் அளித்த செவ்வி, இணையத்தில் வைராலாகி வருகின்றது.

அமெரிக்கா




# 'நான் டுவிட்டரின் தலைமை அதிகாரி'

உலக பணக்காரர்களில் ஒருவரும் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும், அதன் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலோன் மஸ்க் பிரபல சமூக வலைத்தளமான டுவிட்டரை கடந்த ஏப்ரல் மாதம் 44 பில்லியன் அமெரிக்க டொலருக்கு வாங்க முன்வந்தார்.
எனினும் சில வாரங்களிலேயே குறித்த முடிவில் இருந்து பின் வாங்கிய அவர் "டுவிட்டர் நிறுவனம் போலி கணக்குகள் குறித்த விவரங்களை அளிக்க மறுப்பதால், மேற்கொண்டு ஒப்பந்தத்தை இறுதி செய்ய முடியாது" எனத் தெரிவித்திருந்தார்.
இதனை எதிர்த்து டுவிட்டர் நிறுவனம் வழக்குத் தொடர்ந்தது. இதன்போது ஒப்பந்தத்தை தட்டிக்கழிக்க இது போன்ற காரணங்களை எலான் மஸ்க் கூறுவதாக குற்றம்சாட்டியது.
இந்நிலையில், எலான் மஸ்க் டுவிட்டரை வாங்கும் ஒப்பந்தத்தை வெள்ளிக்கிழமைக்குள் முடித்துக்கொள்ளப் போவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்தவகையில் அவர் தற்போது தனது டுவிட்டர் பக்கத்தில் 'நான் டுவிட்டரின் தலைமை அதிகாரி' எனக் குறிப்பிட்டுள்ளார்.

தென் கொரியா

சம்சுங் நிறுவனத்தின் புதிய தலைவராக

# ஜெ ஒய் லீ தெரிவு




சம்சங் நிறுவனத்தில்ன புதிய தலைமை செயற்பாட்டு அதிகாரியாக ஜெ ஒய்.லீ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
தென்கொரியாவைத் தலைமையிடமாக கொண்டு செயற்பட்டு வரும் பன்னாட்டு நிறுவனமான சம்சுங், தொலைபேசி, தொலைக்காட்சி பெட்டிகள், மின்சாதன பொருள் விற்பனையில் முன்னணியில் உள்ளது.

இந்நிலையில் அந்நிறுவனத்தின் புதிய தலைமை செயற்பாட்டு அதிகாரியாக 54 வயதான ஜெ ஒய். லீ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர், இந்நிறுவனத்தை நிறுவிய லீ பியுங் பங் குடும்பத்தை சேர்ந்த 3வது தலைமுறை நபராவார்.
மேலும், ஊழல் வழக்கில் 18 மாதம் சிறை தண்டனை அனுபவித்த நிலையில், தென்கொரிய அரசால் கடந்த ஒகஸ்ட் மாதம் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈரான்



பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில்

# 15 பேர் உயிரிழப்பு

ஈரானில் நேற்று முன் தினம் (26) பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதல்களில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.


ஷிராஸ் நகரில் உள்ள ஷா செராக் புனித தலத்தில் சிலர் தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது, காரில் வந்த பயங்கரவாதிகள் குறித்த புனிதத் தலத்தின் நுழைவாயிலில் இருந்த பக்தர்கள் மற்றும் ஊழியர்களை நோக்கி கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

இதில், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 15 பேர் உயிரிழந்த நிலையில், 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.
இந்நிலையில் தாக்குதல் நடத்திய மூன்று பேரில் இருவரை கைது செய்த பொலிஸார் மூன்றாவது நபரை தேடி வருகின்றனர்.

பிலிப்பைன்ஸ்

சக்திவாய்ந்த நிலநடுக்கம்

# 26 பேர் காயம்



பிலிப்பைன்ஸில் லுஸான், மணிலா உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் 6.4 ரிச்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

தரைப்பகுதியில் இருந்து 11 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்நில நடுக்கத்தால் அப்பகுதிகளில் உள்ள வீடுகள், கடைகள் உள்ளிட்ட பல கட்டடங்கள் குலுங்கின.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 28 ஒக்டோபர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.